நாடோடி மன்னன்

செ.திவான்

நாடோடி மன்னன்

செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,

நஜாத் பதிப்பகம்,
106-F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

ஆசிரியரின் 78–ஆவது நூல்

முதற் பதிப்பு	:	ஆகஸ்ட், 2010
கணினி வடிவமைப்பு	:	நான்சி கணினியகம், பாளையங்கோட்டை
அச்சிட்டோர்	:	சிவசக்தி அச்சகம், சிவகாசி.
முகப்போவியம்	:	N. சங்கர், பாளையங்கோட்டை
விலை	:	ரூபாய் முப்பது

எண்ண அலைகள்

அள்ளி அள்ளித் தந்திட்ட பாரி வள்ளல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1936-ஆம் ஆண்டில் சதி லீலாவதி திரைப்படத்தின் வாயிலாகத் திரைஉலகில் காலடியெடுத்து வைத்தார். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நடித்து வெளிவந்த திரைப்படங்களின் பட்டியல் இதோ . . .

வ. எண்.	படம்	வெளியான தேதி	இயக்குநர்
1.	சதிலீலாவதி	28.03.1936	எல்லீஸ் ஆர். டங்கன்
2.	இரு சகோதரர்கள்	1936	எல்லீஸ் ஆர். டங்கன்
3.	தட்சயக்ஞம்	31.03.1938	ராஜா சந்திரசேகர்
4.	வீர ஜெகதீஷ்	1938	டி.பி. கைலாசம், ஆர். பிரகாஷ்
5.	மாயா மச்சீந்திரா	22.04.1939	ராஜா சந்திரசேகர்
6.	பிரஹலாதா	12.12.1939	பி.என்.ராவ்
7.	வேதவதி (அல்லது) சீதா ஜனனம்	22.02.1941	டி.ஆர். ரகுநாத்
8.	அசோக்குமார்	10.07.1941	ராஜா சந்திரசேகர்
9.	தமிழ் அறியும் பெருமாள்	30.04.1942	டி.ஆர். ரகுநாத்
10.	ஜோதி மலர் (அல்லது) தாசிப்பெண்	03.03.1943	எல்லீஸ் ஆர். டங்கன், ஆர்.எஸ். மணி
11.	ஹரிச்சந்திரா	14.01.1944	நாகபூஷணம்
12.	சாலிவாகனன்	16.02.1945	பி.என். ராவ்
13.	மீரா	03.11.1945	எல்லீஸ் ஆர். டங்கன்
14.	ஸ்ரீமுருகன்	04.06.1946	ஏ.எஸ்.ஏ. சாமி
15.	ராஜகுமாரி	11.04.1947	ஏ.எஸ்.ஏ. சாமி
16.	பைத்தியக்காரன்	26.09.1947	கிருஷ்ணன் – பஞ்சு

வ. எண்.	படம்	வெளியான தேதி	இயக்குநர்
17.	அபிமன்யு	06.05.1948	எம். சோமசுந்தரம், ஏ. காசிலிங்கம்
18.	ராஜமுக்தி	09.10.1948	ராஜா சந்திரசேகர்
19.	மோகினி	31.10.1948	லங்கா சத்யம்
20.	ரத்னகுமார்	15.12.1949	கிருஷ்ணன்பஞ்சு
21.	மருதநாட்டு இளவரசி	02.04.1950	ஏ. காசிலிங்கம்
22.	மந்திரி குமாரி	24.06.1950	மந்திரிகுமாரி
23.	மர்மயோகி	02.02.1951	கோ. இராமநாத்
24.	ஏக்தா ராஜா (இந்தி)	15.06.1951	கோ. இராமநாத்
25.	சர்வாதிகாரி	14.01.1951	டி.ஆர். சுந்தரம்
26.	சர்வாதிகாரி (தெலுங்கு)	05.10.1951	டி.ஆர். சுந்தரம்
27.	அந்தமான் கைதி	14.03.1952	வி. கிருஷ்ணன்
28.	குமாரி	11.04.1952	ஆர். பத்மநாபன்
29.	என் தங்கை	31.05.1952	சி.எச். நாராயணமூர்த்தி
30.	நாம்	05.03.1953	ஏ. காசிலிங்கம்
31.	பணக்காரி	24.04.1953	கோபாலகிருஷ்ணன்
32.	ஜெனோவா (மலையாளம்)	06.06.1953	எஃப். நாகூர்
33.	ஜெனோவா (தமிழ்)	06.06.1953	எஃப். நாகூர்
34.	மலைக்கள்ளன்	22.07.1954	ஸ்ரீ. ராமுலுநாயுடு
35.	கூண்டுக்கிளி	26.08.1954	டி.ஆர். ராமண்ணா
36.	குலேபகாவலி	29.07.1955	டி.ஆர். ராமண்ணா
37.	அலிபாபாவும் 40 திருடர்களும்	14.01.1956	டி.ஆர். சுந்தரம்
38.	மதுரை வீரன்	13.04.1956	டி. யோகானந்தம்
39.	தாய்க்குப் பின் தாரம்	21.09.1956	எம்.ஏ. திருமுகம்
40.	சக்ரவர்த்தி திருமகள்	18.01.1957	ப. நீலகண்டன்

வ. எண்.	படம்	வெளியான தேதி	இயக்குநர்
41.	ராஜராஜன்	26.04.1957	டி.வி. சுந்தரம்
42.	புதுமைப்பித்தன்	02.08.1957	டி.ஆர். ராமண்ணா
43.	மகாதேவி	22.11.1957	சுந்தர்ராவ் நட்கர்
44.	நாடோடி மன்னன்	22.08.1958	எம்.ஜி.ஆர்.
45.	தாய் மகளுக்கு கட்டிய தாலி	31.12.1959	ஆர்.ஆர். சந்திரன்
46.	பாக்தாத் திருடன்	06.05.1960	டி.வி. சுந்தரம்
47.	ராஜா தேசிங்கு	02.09.1969	டி.ஆர். ரகுநாத்
48.	மன்னாதி மன்னன்	19.10.1960	எம். நடேசன்
49.	அரசிளங்குமாரி	01.01.1961	ஏ.எஸ்.ஏ. சாமி
50.	திருடாதே	23.03.1961	ப. நீலகண்டன்
51.	சபாஷ் மாப்பிளே	14.07.1961	எஸ். இராகவன்
52.	நல்லவன் வாழ்வான்	31.08.1961	ப. நீலகண்டன்
53.	தாய்சொல்லைத் தட்டாதே	07.11.1961	எம்.ஏ. திருமுகம்
54.	ராணி சம்யுக்தா	14.01.1962	டி. யோகானந்தம்
55.	மாடப்புறா	16.02.1962	எஸ்.ஏ. சுப்புராமன்
56.	தாயைக் காத்த தனயன்	13.04.1962	எம்.ஏ. திருமுகம்
57.	குடும்பத் தலைவன்	15.08.1962	எம்.ஏ. திருமுகம்
58.	பாசம்	31.08.1962	டி.ஆர். ராமண்ணா
59.	விக்கிரமாதித்தன்	27.10.1962	டி.ஆர். ரகுநாத், என்.எஸ். ராமநாதன்
60.	பணத்தோட்டம்	11.01.1963	கே. சங்கர்
61.	கொடுத்து வைத்தவள்	09.02.1963	ப. நீலபண்டன்
62.	தர்மம் தலைகாக்கும்	22.02.1963	எம்.ஏ. திருமுகம்
63.	கலை அரசி	19.04.1963	ஏ. காசிலிங்கம்
64.	பெரிய இடத்துப் பெண்	10.05.1963	டி.ஆர். ராமண்ணா
65.	ஆனந்த ஜோதி	28.06.1963	வி.என். ரெட்டி, ஏ.எஸ்.ஏ. சாமி
66.	நீதிக்குப் பின் பாசம்	15.08.1963	எம்.ஏ. திருமுகம்
67.	காஞ்சித் தலைவன்	26.10.1963	ஏ. காசிலிங்கம்
68.	பரிசு	15.11.1963	டி. யோகானந்தம்
69.	வேட்டைக்காரன்	14.01.1964	எம்.ஏ. திருமுகம்

வ. எண்.	படம்	வெளியான தேதி	இயக்குநர்
70.	என் கடமை	13.03.1964	எம். நடேசன்
71.	பணக்காரக் குடும்பம்	24.04.1964	டி. ஆர். இராமண்ணா
72.	தெய்வத்தாய்	18.07.1964	பி. மாதவன்
73.	தொழிலாளி	25.09.1964	எம்.ஏ. திருமுகம்
74.	படகோட்டி	03.11.1964	டி. பிராகாஷ் ராவ்
75.	தாயின் மடியில்	18.12.1964	ஏ. சுப்புராவ்
76.	எங்க வீட்டுப் பிள்ளை	14.01.1965	சாணக்யா
77.	பணம் படைத்தவன்	27.03.1965	டி.ஆர். இராமண்ணா
78.	ஆயிரத்தில் ஒருவன்	09.07.1965	பி.ஆர். பந்தலு
79.	கலங்கரை விளக்கம்	28.08.1965	கே. சங்கர்
80.	கன்னித்தாய்	10.09.1965	எம்.ஏ. திருமுகம்
81.	தாழம்பூ	23.10.1965	என்.எஸ். ராமதாஸ்
82.	ஆசை முகம்	10.12.1965	பி. புல்லையா
83.	அன்பே வா	14.10.1966	ஏ.சி. திருலோகசந்தர்
84.	நான் ஆணையிட்டால்	04.02.1966	சாணக்யா
85.	முகராசி	18.02.1966	எம்.ஏ. திருமுகம்
86.	நாடோடி	14.04.1966	பி.ஆர். பந்தலு
87.	சந்திரோதயம்	27.05.1966	கே. சங்கர்
88.	தாலி பாக்கியம்	27.08.1966	கே. பி. நாகபூஷணம்
89.	தனிப்பிறவி	16.09.1966	எம்.ஏ. திருமுகம்
90.	பறக்கும் பாவை	11.11.1966	டி.ஆர். இராமண்ணா
91.	பெற்றால்தான் பிள்ளையா	09.12.1966	கிருஷ்ணன்—பஞ்சு
92.	தாய்க்குத் தலைமகன்	13.01.1967	எம்.ஏ. திருமுகம்
93.	அரச கட்டளை	19.05.1964	எம்.ஜி.சக்கரபாணி
94.	காவல்காரன்	07.09.1967	ப. நீலகண்டன்
95.	விவசாயி	01.11.1967	எம்.ஏ. திருமுகம்
96.	ரகசிய போலீஸ் 115	11.01.1968	டி.ஆர். பந்தலு
97.	தேர்த் திருவிழா	23.02.1968	எம்.ஏ. திருமுகம்
98.	குடியிருந்த கோவில்	05.03.1968	கே. சங்கர்
99.	கண்ணன் என் காதலன்	25.04.1968	ப. நீலகண்டன்
100.	புதிய பூமி	27.06.1968	சாணக்யா

வ. எண்.	படம்	வெளியான தேதி	இயக்குநர்
101.	கணவன்	15.08.1968	ப. நீலகண்டன்
102.	ஒளிவிளக்கு	20.09.1968	சாணக்யா
103.	காதல் வாகனம்	21.10.1968	எம்.ஏ. திருமுகம்
104.	அடிமைப்பெண்	01.05.1969	கே. சங்கர்
105.	நம்நாடு	07.11.1969	ஜம்பு
106.	மாட்டுக்கார வேலன்	14.01.1970	ப. நீலகண்டன்
107.	என் அண்ணன்	21.05.1970	ப. நீலகண்டன்
108.	தலைவன்	24.07.1970	தாமஸ், சிங்கமுத்து
109.	தேடிவந்த மாப்பிள்ளை	29.08.1970	பி.ஆர். பந்தலு
110.	எங்கள் தங்கம்	09.10.1970	கிருஷ்ணன் பஞ்சு
111.	குமரிக்கோட்டம்	26.01.1971	ப. நீலகண்டன்
112.	ரிக்ஷாக்காரன்	29.05.1971	எம். கிருஷ்ணன்
113.	நீரும் நெருப்பும்	18.10.1971	ப. நீலகண்டன்
114.	ஒரு தாய் மக்கள்	09.12.1971	ப. நீலகண்டன்
115.	சங்கே முழங்கு	04.02.1972	ப. நீலகண்டன்
116.	நல்ல நேரம்	10.03.1972	எம்.ஏ. திருமுகம்
117.	ராமன் தேடிய சீதை	13.04.1972	ப. நீலகண்டன்
118.	நான் ஏன் பிறந்தேன்	09.06.1972	எம். கிருஷ்ணன்
119.	அன்னமிட்டகை	15.09.1972	எம். கிருஷ்ணன்
120.	இதயவீணை	20.10.1972	கிருஷ்ணன் பஞ்சு
121.	உலகம் சுற்றும் வாலிபன்	11.05.1973	எம்.ஜி.ஆர்.
122.	பட்டிக்காட்டு பொன்னையா	10.08.1973	பி.எஸ். ரங்கா
123.	நேற்று இன்று நாளை	12.07.1974	ப. நீலகண்டன்
124.	உரிமைக்குரல்	07.01.1974	சி.வி.ஸ்ரீதர்
125.	சிரித்து வாழ வேண்டும்	30.11.1974	எஸ்.எஸ். பாலன்
126.	நினைத்ததை முடிப்பவன்	09.05.1975	ப. நீலகண்டன்
127.	நாளை நமதே	04.07.1975	கே.எஸ். சேதுமாதவன்
128.	இதயக்கனி	22.08.1975	ஏ. ஜெகந்நாதன்
129.	பல்லாண்டு வாழ்க	31.10.1975	கே. சங்கர்
130.	நீதிக்குத் தலைவணங்கு	18.03.1976	ப. நீலகண்டன்

வ. எண்.	படம்	வெளியான தேதி	இயக்குநர்
131.	உழைக்கும் கரங்கள்	23.05.1976	கே. சங்கர்
132.	ஊருக்கு உழைப்பவன்	12.11.1976	எம். கிருஷ்ணன்
133.	நவரத்தினம்	05.03.1977	ஏ.பி. நாகராஜன்
134.	இன்று போல் என்றும் வாழ்க	05.05.1977	கே. சங்கர்
135.	மீனவ நண்பன்	14.08.1977	சி.வி. ஸ்ரீதர்
136.	மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்	14.01.1978	எம்.ஜி.ஆர்.
137.	அவசர போலீஸ் 100	11/17.10.1990	கே. பாக்யராஜ்
138.	நல்லதை நாடு கேட்கும்	09/10.05.1991	எம். கர்ணன்

கவிஞர் கண்ணதாசன்

23.11.1957-இல் வெளிவந்த மகாதேவி திரைப்படத்தின் கதையைத் தயாரிப்பாளர்கள் சிதைத்திருந்தார்கள். அந்தப் படத்தை எழுதிய கவியரசு கண்ணதாசன் மிகவும் புண்பட்ட மனத்தோடு எம்.ஜி.ஆரைச் சந்தித்தார். "இனி, நீங்களே முழுப் பொறுப்பேற்றுக் கொண்டு தயாரிக்கும் ஒரு படம் வந்தாலொழிய, மக்கள் நம்பிக்கை நிலைக்காது" என்று கவிஞர் கண்ணதாசன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரிடம் கூறினார்.

3000 அடியில் நாடோடி மன்னன்

மகாதேவி திரைப்படம் வெளியே வந்தபோது, நாடோடி மன்னன் 3000 அடிகளே வளர்ந்திருந்தது. அந்தப் படத்தினை வெற்றிகரமாக தயாரித்து முடித்துவிடுவது என்று முழு மூச்சுடன் இறங்கினார் புரட்சி நடிகர். எம்.ஜி.ஆரின் வெற்றிக்கெல்லாம் மகுடம் சூட்டியது போல வெளியான படம் நாடோடி மன்னன். நாடோடி மன்னனின் வெற்றி வரலாறு இதோ . . .

06.04.2009
பாளையங்கோட்டை

செ. திவான்,
106F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

நாடோடி மன்னன்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் திரை உலக வெற்றிக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல வெளியான படம் 'நாடோடி மன்னன்'.

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ்

'எம்.ஜி.ஆர். நாடகக் கம்பெனி' நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், சொந்தமாக 'எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ்' என்று ஒரு படத்தயாரிப்பு நிறுவனத்தை எம்.ஜி.ஆர். துவங்கினார். அண்ணன் எம்.ஜி. சக்கரபாணி அவர்களை பங்குதாரராகவும், எம்.ஜி.ஆர். அவர்களை நிர்வாகப் பங்குதாரராகவும் கொண்டு ஒரு பங்குதாரர் நிறுவனம் - **'பார்ட்னர்ஷிப் ஃபர்ம்'** என்று உருவானது. அந்த நிறுவனம் 'நாடோடி மன்னன்' படத்தைத் தொடங்கியது.

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்

பிறகு கொஞ்ச காலம் கழித்து வருமான வரி தொடர்பான சில காரணங்களுக்காக அது **'எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்'** கம்பெனியாக மாற்றப்பட்டது. பங்குதாரர்களின் எண்ணிக்கையை அதில் அதிகமாக்கியது.

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் மூலமாகத் தயாரிக்கப்பட்ட முதல் படம் 'நாடோடி மன்னன்'. அந்தப் படம் ஓரளவுக்கு எடுக்கப்பட்டிருந்த நிலையில் எம்.ஜி.ஆர். நடித்து வந்த **'ராஜா தேசிங்கு'**, **'விக்ரமாதித்தன்'** போன்ற அதிக பொருட் செலவில் எடுக்கப்பட்டு வந்த படங்களும் பாதி வளர்ந்திருந்தன.

கவிஞர் கண்ணதாசன் அவர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டு மற்ற படங்களை நிறுத்திவிட்டு 'நாடோடி மன்னன்' படத்தை வெளியிட முடிவு செய்த எம்.ஜி.ஆர்., 1958 பிப்ரவரியில் படம் வெளியாகும் என்றும் அறிவித்து விட்டார். ஆனால் படமோ பாதிதான் முடிந்திருந்தது.

மாதங்கள் நகர்ந்து கொண்டிருந்தன. படப்பிடிப்பு நடந்து கொண்டேயிருந்தது. படம் முடிந்தபாடில்லை. வெளியிடும் தேதிகள் மாற்றப்பட்டுக் கொண்டிருந்தன.

'நாடோடி மன்னனை' எப்படி முடிப்பது? ஏராளமான பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. கச்சாஃபிலிமுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவி வந்த நிலையில் ஒரு சுருள் எழுபது ரூபாய் மார்க்கெட் விலை என்றால் வெளியில் நானூற்றைம்பது ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய நிலை. வரவு இல்லாமல் செலவு மட்டும் ஏறிக் கொண்டிருந்தது.

'நாடோடி மன்னனை' முடித்தாக வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர். தீவிரமாக இருந்ததால் மற்ற படங்கள் எதிலும் அவர் கவனம் செலுத்தவில்லை. ஏற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த - தொடங்கப்பட்டு சில நாட்கள் மட்டுமே ஷூட்டிங் பாக்கியிருந்த - படங்களின் படப்பிடிப்புகள் நாடோடி மன்னனுக்காக மொத்தமாக ஒத்தி வைக்கப்பட்டன. எனவே அந்தப் படங்களிலிருந்து வரக்கூடிய வருமானம் நின்று போயிருந்தது. அதனால் பண நெருக்கடி ஏற்பட்டது.

ஏ.வி.எம். செட்டியார்

நாடோடி மன்னன் திரைப்படத் தயாரிப்பிற்காக ஏ.வி. மெய்யப்ப செட்டியாரிடம் எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் கடன் பெற்றது. படத்தயாரிப்பு வேலையும் தொடர்ந்து நடைபெற்றது.

தாமதமான நிலை

அறிவிக்கப்பட்டது போல படம் 1958 பிப்ரவரியில் முடியவில்லை. இழுத்துக் கொண்டே போனது. பின்னர் ஜூலையில் படம் வெளியாகும் என்று அறிவித்து, அதுவும் முடியாமல் ஆகஸ்டு 15-இல் வெளியிடுவதாக விளம்பரம் செய்தார்கள். சென்ஸாருக்குப் போட்டுக் காட்டுவதில் ஏற்பட்ட சில தடைகள் காரணமாக ஆகஸ்ட் பதினைந்தாம் தேதியும் தள்ளிப் போய் ஆகஸ்ட் 22-ஆம் தேதி என்று முடிவானது.

எப்போது வேலை முடியும் என்று எல்லோரும் தவித்துக் கொண்டிருக்க, எம்.ஜி.ஆர். அவர்களோ இது பற்றியெல்லாம்

கவலைப்படாமல் படத்தை மேலும் மேலும் எப்படி மெருகூட்டிக் கொண்டு போகலாம் என்பதிலேயே கவனமாக இருந்தார்.

ஜி.டி. சாஸ்திரி

ஒரு வழியாகப் படத்தயாரிப்பு முடிந்தது. தணிக்கைக் குழுவிற்கு படத்தைப் போட்டுக் காட்ட வேண்டும். அப்போதிருந்த அதிகாரி ஜி.டி.சாஸ்திரி என்பவர் கண்டிப்புக்குப் பெயர் போனவர். விதிமுறைகளைக் கொஞ்சமும் விட்டுக் கொடுக்காதவர். நாடோடி மன்னன் பற்றி பல புகார்களை பலர் முன்னதாகவே தணிக்கைக் குழுவிற்கு எழுதியிருந்தார்கள்.

மினர்வா தியேட்டர்

தணிக்கைக் குழுவினருக்காக ‘மினர்வா’ தியேட்டரில் ‘நாடோடி மன்னன்’ படம் காண்பிக்கப்பட்டது. சென்சாரில் என்னென்ன பிரச்னைகள் வருமோ, என்னென்ன சந்தேகங்களை அவர்கள் எழுப்புவார்களோ என்று பயந்ததற்கு மாறாக சாஸ்திரி அவர்கள் படம் பார்த்துவிட்டு ‘நோ கமெண்ட்ஸ்’ என்று வயிற்றில் பாலை வார்த்தார்கள்.

டைட்டில் சாங் – நா. மா. முத்துக்கூத்தன்

சாஸ்திரி அவர்கள் ‘நோ கமெண்ட்ஸ்’ என்று சொன்ன பிறகு புதிதாக எடிட்டிங் வேலைகள் ‘நாடோடி மன்னன்’ படத்துக்கு ஆரம்பமாயின. சில புதிய காட்சிகளையும் எம்.ஜி.ஆர். சேர்த்தார். படத்தில் நா. மா. முத்துக்கூத்தன் எழுதி, படமாக்கப்பட்ட ‘டைட்டில் சாங்’ அவற்றில் ஒன்று. அப்படிச் சேர்க்கப்பட்ட காட்சிகளை சென்ஸார் அதிகாரி பார்த்து ஓ.கே. செய்ய வேண்டியிருந்ததால் அந்தப் பகுதிக் காட்சிகளை சென்னை மவுண்ட் ரோட்டில் ரேவதி ரிகார்டிங் ஸ்டுடியோவில் சாஸ்திரி அவர்கள் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது. அவரும் அவருடன் சென்ஸார் போர்டின் இன்னொரு உறுப்பினரும் ஆகஸ்டு 12-ஆம் தேதி பார்க்க இருந்தார்கள். அவர்கள் அதைப் பார்த்து ஓ.கே. செய்ததும் ஆகஸ்டு 15-ஆம் தேதி வெளியிட எல்லா ஏற்பாடுகளையும்

செய்திருந்தார்கள். அன்று இந்திய விடுதலை நாள் ஆகையால் விசேட காலைக் காட்சி நடத்தவும் அனுமதி பெறப்பட்டிருந்தது. சாதாரண நாட்களில் மூன்று காட்சிகளும், வார விடுமுறை நாட்களில் நான்கு காட்சிகளும் அப்போது வழக்கம். சிறப்பு விடுமுறையின்போது விசேட காட்சி நடத்தலாம். 'நாடோடி மன்னன்' திரையிடப்பட இருந்த திரையரங்குகளில் விசேட காலைக் காட்சிக்கான டிக்கெட்டுகள் ஏற்கெனவே அட்வான்ஸ் ரிசர்வேஷன் ஆகியிருந்தன.

இந்நிலையில், எடுக்கப்பட்ட பகுதிக் காட்சிகளை லேபுக்கு அனுப்பி அங்கு அவை பிரிண்ட் எடுக்கப்பட்டு 12-ஆம் தேதி பிற்பகல் சென்ஸார் பார்வைக்கு வரும்படி தயாராக இருக்க வேண்டும் என்று ஏற்பாடு. ஆனால் பிரிண்ட் தயாராகி வரவில்லை.

எம்.ஜி.ஆர். உடனிருக்க . . .

சாஸ்திரி அவர்களும் இன்னொரு உறுப்பினரும் பகுதிக் காட்சிகளைப் பார்க்க முடியவில்லை. இப்படி ஏதாவது நேர்ந்தால் சாஸ்திரி கோபமடைவார் என்று தெரிந்திருந்ததால், அவசியம் ஏற்பட்டால் அவரைச் சமாதானப்படுத்த எம்.ஜி.ஆரும் உடனிருந்தால் நல்லது என்று எண்ணி அவரையும் அன்று சென்ஸார் அதிகாரிகள் படம் பார்க்க வந்த தியேட்டருக்கு ஆர்.எம்.வீ. அழைத்துப் போயிருந்தார். ஆனால் அதிர்ஷ்டவசமாக சாஸ்திரி அன்று கோபப்படவில்லை. லேபரட்டரியில் மின்தடை. எனவே தாமதமாகிறது என்று சமாதானம் சொல்லப்பட்டது.

"நாளைக்கு பார்த்து விடலாமா?" என்று ஆர்.எம்.வீ. சாஸ்திரியைக் கேட்டார்.

சீர்காழி கோவிந்தராஜன்

"நாளைக்கும் கரண்ட் ஃபெயில் ஆனா என்ன பண்ணுவீங்க? நீங்க எல்லாம் ரெடி பண்ணிட்டு சொல்லுங்க. நான் உடனே வந்து பார்க்கிறேன்" என்று உறுதி தந்தார் சாஸ்திரி. படம் நிச்சயமாக ஆகஸ்டு 15-ல் வெளியிட முடியாது என்று தெரிந்து விட்டது. சென்ஸார் அதிகாரிகள் படம்

பார்த்த தியேட்டர் வராந்தாவிலேயே எம்.ஜி.ஆர்., ஆர்.எம்.வீ., டைரக்டர் கே. சுப்ரமணியம் ஆகியோர் படத்தை ஒரு வாரம் தள்ளி ஆகஸ்டு 22-ஆம் தேதி வெளியிடலாம் என்று முடிவு செய்தார்கள். அப்படியே விளம்பரம் வெளியானது.

அந்த ஒரு வாரத்திலும் எம்.ஜி.ஆர். சும்மாயிருக்கவில்லை. ஆர்.எம்.வீ.யை அழைத்து 'சீர்காழி கோவிந்தராஜன் இருக்கிறாரா பாருங்கள்' என்றார்.

'ஏன்?'

'நம் படத்தில் 'செந்தமிழே வணக்கம்' டைட்டில் சாங்கை டி.எம்.எஸ். பாடியிருக்கிறார். சீர்காழி பாடினால் இன்னும் நன்றாகயிருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. அதுதான் . . .'

22.08.1958

அப்போது சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் ஊரில் இல்லை. எனவே எம்.ஜி.ஆர். அதை வலியுறுத்தாமல் விட்டு விட்டார். ஆகஸ்டு 22-ஆம் தேதியன்று விடுமுறை நாளாக இல்லா விட்டாலும், கே. சுப்ரமணியம் அவர்கள் முயற்சி செய்து அன்றைய காங்கிரஸ் அரசுடன் பேசி, ஏற்கெனவே ஆகஸ்டு 15-ஆம் தேதி வெளியாகும் என்று ரசிகர்கள் அட்வான்ஸ் ரிசர்வேஷன் செய்திருந்ததை சுட்டிக்காட்டி, விடுமுறை நாளாக இல்லாவிட்டாலும் அன்று காலைக் காட்சி நடத்த சிறப்பு அனுமதியைப் பெற்றார். 22.08.1958-இல் நாடோடி மன்னன் வெளிவந்தது.

'நாடோடி மன்னன்' படம் வெளியாகி மக்களை வெகுவாகக் கவர்ந்து மாபெரும் வெற்றி பெற்றது என்பது வரலாறு. அதுவரை வெளியான எம்.ஜி.ஆர். படங்களுக்கெல்லாம் வெற்றிச் சிகரமாய் அந்தப் படம் அமைந்தது; மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டது. தமிழ்த் திரையுலகில் 'நாடோடி மன்னன்' படம் ஒரு திருப்பு முனையாகவே கருதப்பட்டது.

கதைச் சுருக்கம்

இரத்தினபுரியின் அரியணை சில காலமாகவே, வீற்றிருக்கும் வேந்தரின்றி வாடியது. முறைப்படி பட்டம் பெறத்

தகுதியுடைய இளவரசி **ரத்னாவோ** குழந்தையிலேயே காணாமற் போயிருந்தாள். அதனால் அமைச்சர் **குணசீலரும்** தளபதி **சங்கமரும்** அரச குடும்பத்தைச் சேர்ந்த **மார்த்தாண்டனுக்கு**, அவன் வெளிநாட்டு யாத்திரையை முடித்துத் திரும்பியதும் முடிசூட்டிவிடத் தீர்மானித்தார்.

இதற்கு மூன்று முனைகளில் மூவிதக் காரணங்களைக் கொண்டு பலத்த எதிர்ப்பும் மறுப்பும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் எழுந்தன.

சுயநல வெறியிலே, அரசபோகத்தில் ஆசை வைத்து அடையத் துடித்த ராஜகுரு **அருளானந்தர்** தன் கைப்பாவையாக ஆடக்கூடிய **பிங்கலனுக்கு** அவன், மாண்ட மன்னரின் உறவினன் என்ற முறையைக் காட்டி மணிமுடி சூட்டத் திட்டமிட்டார். இத்திட்டத்திற்குக் **கார்மேகத்தைக்** கருவியாக்கிக் கொண்டார்.

ராஜ குடும்ப நலத்திற்கும், இளவரசியின் எதிர்கால வாழ்விற்கும் நன்மை செய்யும் நாட்டத்துடன் **வீரபாகு** (மறைந்த மன்னரின் மெய்க் காவலன்) தன்மகன் **பூபதி**, மகள் **மதனா** மற்றும் புரட்சிக் கூட்டத்தின் துணையுடன் திட்டம் தீட்டினான். 'இளவரசியைக் கண்டுபிடிப்பது - அதுவரை எவருமே அரியணை ஏறுவதை ஏற்பதில்லை. தடையாக உள்ளவர்களின் தலை சீவப்படும்!' இவே அவர்களின் இலட்சியம்.

மூன்றாவதாக நாட்டு மக்களின் நல்லெண்ணெத் தூதுவனாக **வீராங்கன்** என்னும் இளைஞன் விளங்கினான். **'மன்னர் ஆட்சியே கூடாது - மக்கள் தேர்ந்தெடுக்கும் தலைவனின் ஆட்சியே வேண்டும்'** என்பது இவன் கொள்கை. **ஆமையாய் ஊமையாய் அடங்கிக் கிடப்போரின் தோழன் அவன். நாதியற்றவர்களின் பிரதிநிதி . . .** அதனால் நாடோடி என்று மற்றவர்களால் அழைக்கப்பட்ட அவன் நாடு காக்கும் பணிக்குத் தன்னை ஒப்படைத்து உழைத்து வந்தான். அவனும் மார்த்தாண்டன் மன்னனாவதை எதிர்த்தான்.

இவ்வித குழப்பமான சூழ்நிலையில்தான் முடிதரிக்க மார்த்தாண்டன் வந்து சேர்ந்தான். ராஜகுரு சும்மா இருந்து

விடுவாரா? ‘ஜாதக பலன் சரியில்லை’ என்றார். நாட்டுக்கு வெளியேயுள்ள வேட்டை விடுதியில்தான் மார்த்தாண்டன் தங்க வேண்டுமென்றார். முடிசூட்டு விழாவிற்கு முதல் நாள் கார்மேகத்தின் மூலம் விஷத்தை அனுப்பி, மார்த்தாண்டனை மாய்க்க முயற்சி செய்தார்.

இதற்கிடையில் நாடோடி வீராங்கன் சிறைப்பட்டு, விடுதலையடைந்து மதனாவின் நட்புப் பெற்று இருந்து வரும் நேரத்தில் அவனுக்கும் மார்த்தாண்டனுக்கும் உள்ள உருவ ஒற்றுமையைக் கண்டு மக்கள் அனைவரும் அவனையே புதிய மன்னன் என எண்ணி மரியாதை செய்கின்றனர். அதே சமயம் புரட்சிக் கூட்டத்தைச் சேர்ந்த வீரபாகுவின் ஆட்கள் நாடோடி வீராங்கனை மன்னன் என்று சந்தேகித்து, உணவு விடுதி ஒன்றில் சந்தித்துக் கொலை செய்ய முயல்கின்றனர். அவர்களிடமிருந்து தப்பிய நாடோடி எதிர்பாராது வேட்டை விடுதிக்குள் நுழைந்து அங்கு மார்த்தாண்டனைச் சந்திக்க நேர்கிறது. ஒரே தோற்றத்தில் இரண்டு உருவங்கள் . . . இருவரும் ஆச்சரியமுற்றனர்.

நாடோடியின் இலட்சியங்களைக் கேட்டறிந்த மார்த்தாண்டன் அவனை நண்பனாக்கிக் கொள்கிறான். இருவரும் விருந்துண்ட நேரத்தில் விஷம் கலந்த பழரசம் அருந்தியதால் மார்த்தாண்டன் மயக்கம் அடைந்தான். விடிந்தால் முடிசூட்டு விழா. அமைச்சரும், தளபதியும், உருவ ஒற்றுமையைப் பயன்படுத்தி - நாடோடியை மார்த்தாண்டனாக நடிக்கச் செய்து நாட்டுக்கு மன்னனாக்குகின்றனர். ராஜகுருவுக்கு ஏமாற்றம் ஏற்படுகிறது. அதனால் மயக்கமுற்ற மார்த்தாண்டனைக் கடத்தி, பிங்கலன் கோட்டைக்குள் சிறைப்படுத்திவிடுகின்றனர். அதனால் ஒரு நாளுக்காக முடிதரித்த நாடோடி தொடர்ந்து மன்னனாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

நாடோடி செங்கோல் ஏந்தியதும் புதிய பல சட்டங்கள் இயற்றினான். எல்லாவற்றிலும் புதுமைகளை வகுத்தான். மகாராணி **மனோகரி**யிடம் நெருங்காமல் - தன் சகோதரி போல நினைத்து - ஆனால் அவளிடம் அந்த உண்மையைச் சொல்ல முடியாத நிலையில் பழகி வந்தான். தன் காதலி மதனாவைச்

சந்திப்பதும், அவளுடைய சீரிய பண்புகளைப் பாராட்டி மகிழ்வதுமாக அவன் வாழ்ந்த இந்நாளில் - மனோகரி தன் கணவன்தான் மதனாவுடன் பழகுவதாக எண்ணி வருந்தித் தவிக்க - அது சமயம் ராஜகுரு அவளிடம் விஷம் தோய்த்த மலரைக் கொடுத்து 'இதன் மூலம் மன்னனை வசியப்படுத்திவிட முடியும்' என்று கூறி மலரை நாடோடிக்குத் தர ஏற்பாடு செய்கிறார். ஆனால் மலரை நுகராமல் நாடோடி தப்புகிறான்.

ஒரு நாள் மதனா - பிங்கலன் கையில் சிக்கி - நாடோடியைப் பற்றி அவன் கேட்ட விவரங்களைக் கூற மறுத்து; தண்டனை பெறும் நேரத்தில் நாடோடி வந்து விடவே - கைகலப்பு ஏற்பட்டுப் பகைவர்கள் அவமானப்படுத்தப்படுகின்றனர். ஆனால் மதனா எதிர்பாராமல் மரண காயப்படுத்தப்படுகிறான்.

இதற்கிடையில் ஒரு நாள்மனோகரியிடம் தான் மன்னன் அல்ல என்பதை நாடோடி கூறும் நிலை ஏற்படுகிறது. மனோகரி மன்னனாக அவன் இருக்கட்டும் - அதே சமயம் தன் அண்ணனாகவே இருக்கட்டும் என்று கூறுகிறான். நிம்மதியடைந்த நாடோடிக்கு பிங்கலன், ராஜகுருவின் எதிர்ப்பு வளர்ந்து வருகிறது. மார்த்தாண்டன் மறைக்கப்பட்டிருப்பதை நாடோடியும் தெரிந்து கொண்டான் என்ற காரணத்தால் ராஜகுரு, மார்த்தாண்டனைக் கன்னித்தீவுக்கு அனுப்பித் தானும் அங்கே போய்விடுகிறார். பிங்கலனும், கார்மேகமும் பிறகு தொடர்ந்து செல்கின்றனர். காயம்பட்ட மதனா மரணத்தைத் தழுவுகிறாள். சோகத்தால் துடிக்கும் நாடோடி, வீரபாகுவின் சொற்படி கன்னித் தீவுக்குப் புறப்படுகிறான். மன்னனையும், நாட்டின் இளவரசியையும் கண்டுபிடித்து அழைத்து வரும் நோக்கத்துடன்.

அங்கே . . . ராஜகுரு அருளானந்தர் தீவுவாசிகளின் தலைவனாகக் காட்சியளிக்கிறார். அவரது இச்சைக்குப் பலியாகும் நிலையில் இருக்கிறாள் இளவரசி ரத்னா. உண்மையறியும் கார்மேகத்தைக்கூட சிறையில் தள்ளிவிடுகிறார் ராஜகுரு.

தற்செயலான சந்திப்பில் ரத்னாவைக் கண்டு, அவள் இளவரசி என்பதையறிந்து, அவளைக் காப்பாற்ற எண்ணுகிறான் நாடோடி.

ஆனால் அதற்குள் . . .

கன்னி பூஜையும் அதையொட்டி குருதேவருக்கும் ரத்னாவுக்கும் திருமணமும் நிகழ்த்த ஏற்பாடு ஆகிறது.

கழுகுக் குகையில் மார்த்தாண்டனுடன் கார்மேகம் திருந்திய மனிதனாக அடைபட்டிருக்கிறான்.

நாடோடியின் வரவை எதிர்பார்த்து ஆவலுடன் நிற்கும் ரத்னா பிங்கலன் பிடியில் சிக்குகிறாள்.

இவர்கள் அனைவரின் வாழ்வுக்கும் வழி வகுக்க வேண்டிய நாடோடி வீராங்கனும் தீவுத் தலைவனாக வேடமிட்டிருக்கும் குருதேவரின் ஆட்களிடம் சிக்கிக் கொள்கிறான். . .

அறம் வெல்லும், மறம் மடியும்

பிறகு . . .

அறம் வெல்லும், மறம் மடியும். இதுதான் நாடோடி மன்னன் திரைக்கதை.

நடிகர்கள் – நடிகைகள்

எம்.ஜி. ராமச்சந்திரன்	–	பி. பானுமதி
பி.எஸ். வீரப்பா	–	எம்.என். ராஜம்
எம்.என். நம்பியார்	–	பி. சரோஜா தேவி
சந்திரபாபு	–	டி.பி. முத்துலெட்சுமி
எம்.ஜி. சக்கரபாணி	–	ஜி. சகுந்தலா
டி.கே. பாலச்சந்திரன்	–	அங்கமுத்து
கே.ஆர். ராம்சிங்	–	சந்திரா
பூபதி நந்தாராம்	–	மாதுரி
டி.வி. சிவானந்தம்	–	மோகனா
கே.பி. ஜெயராமன்	–	இந்திரா

எஸ்.எம். திருப்பதிசாமி தோடி கண்ணன், ஆர்.எம். சேதுபதி, சிவஞானம், ஏ.எஸ். மணி, ஏ. கிருஷ்ணமூர்த்தி, எஸ்.வி. சண்முகம், சங்கரமூர்த்தி, என்.எம். முத்துக்கூத்தன், டி.எஸ். மாணிக்கம், கே.பி. தூயமணி, கேசவன் எஸ்.என். ரத்தினம், சாமி, என்.சி. ஜோஸப், மங்கான் துரைராஜ், என்.எஸ். நடராஜன், குண்டுமணி மற்றும் பலர்.

சண்டை வீரர்கள்:	டி.எம். கோபால், ரமணி, பசவப்பா, தர்மலிங்கம், சீதாராமன், அழகிரிசாமி, கணேசன், கோலப்பன், சாரதி, சி. கிருஷ்ணன், தேவதாஸ், எஸ். நடராஜன், ரத்தினம், அருணாசலம், ராமகிருஷ்ணன், திருமலை, வீ.ஆர். சந்திரன், வி.கே. ஆச்சாரி, டி.எம். முத்துப்பிள்ளை.
பின்னணி பாடியவர்கள்:	டி.எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், பி.ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி), பி. லீலா, பி. சுசீலா, டி.வி. ரத்னம், ஜமுனா ராணி, என்.எல். கானசரஸ்வதி, வைதேகி, சாந்தா.
கதை:	எம்.ஜி.யார் பிக்சர்ஸ் கதை இலாகா. ஆர்.எம். வீரப்பன், வித்துவான் வே. இலக்குமணன், எஸ்.கே.டி. சாமி.
வசனம்:	கவிஞர் கண்ணதாசன், ரவீந்திரன்.
பாடல்கள்:	இலக்குமணதாஸ், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், சுரதா, ஆத்மநாதன், முத்துக்கூத்தன், விஜயநரசிம்மலு, நாராயண பாபு, பாஸ்கரன்.
இசையமைப்பு:	எஸ்.எம். சுப்பையா, என்.எஸ். பாலகிருஷ்ணன்
நடனப் பயிற்சி:	தங்கராஜ், மாதவன், கிருஷ்ணராஜ்
சண்டைப் பயிற்சி:	ஆர். என். நம்பியார்

உருவாக்கியவர்கள்

ஒப்பனை	: ஏ. ராமதாஸ்
உதவி	: முத்து, கண்ணன், ஜானகிராமன்
சிகை அலங்காரம்	: ரங்கசாமி, ஜோசபின்
உடை அலங்காரம்	: பிரான்சிஸ்
உதவி	: இராஜையா, மணி, ராஜன், வெங்கடேசன்
எடிட்டிங்	: கே. பெருமாள்
காட்சியமைப்பு	: கே. நாகேஸ்வர ராவ், பி.ஏ.,

ஓவியக் காட்சி நுணுக்கம்	:	கே.எஸ்.என். மூர்த்தி
உருவமைப்பு	:	கோபால்பிள்ளை
காட்சி நிர்மாணம்	:	சி. குப்புசாமி நாயுடு, கே. சீனிவாசன், நீலகண்டன்
காட்சி அலங்காரப் பொருட்கள்	:	பிலிமோ க்ராப்ட்ஸ்
		ஸினி க்ராப்ட்ஸ்
		களஞ்சியம் பிரதர்ஸ்
		கிரி மியூசியம்
ஸ்டில்ஸ்	:	ஆர்.என். நாகராஜ ராவ்
விளம்பரப் படங்கள்	:	பட்டாராம் போட்டோ சர்வீஸ்
ஒலிப்பதிவு மேற்பார்வை	:	ஏ. கிருஷ்ணன், பி.ஏ.,
தலைமை மின் விளக்காளர்	:	எம். சங்கரநாராயணன்
ஸ்டுடியோ	:	வாஹினி & விஜயா
லாபரட்டரி	:	விஜயா லாபரட்டரி
லாபரட்டரி பொறுப்பாளர்	:	வி.டி.எஸ். சுந்தரம்
கேவாக்கலர் லாபரட்டரி	:	பிலிம் செண்டர், பம்பாய்
ஸ்டுடியோ நிகழ்ச்சி நிர்வாகம்	:	எஸ். ராமானுஜம்
உதவி	:	ஜி. ராமதாஸ், ஆர். பாலசுப்பிரமணியம்
தயாரிப்பு நிர்வாகம்	:	எஸ். கோவிந்தராஜன்
உதவி	:	கே.என். குஞ்சப்பன், பி. பத்மனாபன்
தயாரிப்பு நிர்வாகம் துணையாளர்	:	ஏ. முத்து, பி.கெ. சபாபதி
ஒலிப்பதிவு உதவி	:	எம்.பி. ராமச்சந்திரன்,
		கே.பி. கோபாலகிருஷ்ணன்
		கே.ஜி. பிரகாஷ், ஏ. சுப்பையா
ஒளிப்பதிவு இயக்குநர்	:	கு. எதீந்திரன், பி.எஸ்.சி.
உதவி	:	கே. சச்சிதானந்தம், டி.வி. குமார்
உதவியாளர்	:	டைரக்ஷன் – அருணா, கே. பெருமாள்
		எடிட்டிங் – பழனி, நடராசன், வி. கணபதி

ஒலிப்பதிவு : வி.பி.சி. மேனன்

ஒளிப்பதிவு : ஜி.கே. ராமு

டைரக்ஷன் : எம்.ஜி.ஆர்.

தமிழகத்தின் பல நகரங்களில் 'நாடோடி மன்னன்' படம் நூறு நாட்களுக்கு மேல் ஓடியது.

அறிஞர் அண்ணா சொன்னார்: **"நாடோடி மன்னனின் வெற்றி சிவசாமியின் தோல்வியையே மறக்க வைத்துவிட்டது. தேர்தல் தோல்வியே நமக்குத் தெரியவில்லை." அந்த அளவுக்கு நாடோடி மன்னனின் வெற்றியை கழகத்தின் அரசியல் வெற்றியாகவே அறிஞர் அண்ணா அப்போது கருதினார்.**

அப்படி அவர் கருதியதற்கு ஒரு காரணமும் உண்டு. அறிஞர் அண்ணாவின் தி.மு.க. தோன்றிய ஒன்பது ஆண்டுகளில் அக்கட்சியின் கொடியை கருப்பு - சிவப்பு வண்ணத்தில் ஓர் ஆணும் பெண்ணும் கையில் உயர்த்திப் பிடித்தபடி இருக்கும் காட்சியை எம்.ஜி.ஆர். பிக்சர்சின் சின்னமாக நாடோடி மன்னனில் காட்டப்பட்டது. அறிஞர் அண்ணாவின் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் என்னென்ன செய்யப்படும் என்பதை விளக்கும் காட்சியமைப்புகளும் கதையோடு ஒட்டிய வகையில் சில இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன. அறிஞர் அண்ணாவின் தி.மு.க. கொடியை பட்டி தொட்டிகளில் எல்லாம் பாமர மக்களின் மனதில் பதிய வைத்த முதல் முயற்சியாகவும் 'நாடோடி மன்னன்' அமைந்தது. அப்படத்தின் வெற்றியை அண்ணா அவர்கள் மிகச் சிறப்பான வெற்றியாகக் கருதியதற்கு இந்த உண்மையும் காரணமாக இருந்திருக்கலாம் என்பர் ராணி மைந்தன்.

மதுரையில் தங்கவாள் பரிசு – 26.10.1958

மதுரையில் 26.10.1958 அன்று புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பும், கொடுக்கப்பட்ட நல்வாழ்த்துக்களும் உலகத்தின் பல்வேறு நாடுகளும் பார்த்தறியாத மகத்தானதொரு நிகழ்ச்சியென்று தான் கூற வேண்டும்.

மக்கள் கலைஞரான திரு. எம்.ஜி.ஆர். அவர்களை நேரில் காணும் ஆர்வம் - அவருடைய பேச்சுக்களைக் கேட்டு மகிழும் ஆவல் - அவருக்காக அறிஞர்களும், பிரமுகர்களும் வழங்கும் வாழ்த்துரைகளைக் கேட்கும் துடிப்பு - அவருடைய வீரத் திருக்கரங்களிலே விளையாடும்படி உவந்து அளிக்கப்படும் வீரவாளை - தங்கவாளை - நேரில் காணும் ஆசை. இவைகள் மட்டுமா? நாட்டுப்பணி செய்யும் ஒரு நல்ல கலைஞரை, எளியவர்களின் தோழராக விளங்கும் உத்தமரை - கொடைக்குணம் படைத்தவரை - சிரித்த முகமும் இனித்த மொழியும் கொண்ட கொள்கை வீரரைப் பாராட்டும் பெருங்குழுவில் தாமும் பங்கு கொள்வதைவிட வேறு பெரும் பேறு இல்லை என்னும் நன்றி கலந்த உணர்ச்சியுடன் மக்கள் கூடியிருந்தனர்.

நூற்றுக்கணக்கான மைலுக்கு அப்பாலிருந்து இரயிலிலும் கார்களிலும் பல்லாயிரம் ரசிகர்கள் பேரொலி முழக்கிய வண்ணம் மதுரைக்கு வந்திருந்தனர். சுற்றுப்புறத்து ஊர்களிலிருந்து அணி அணியாக வந்த பெருமக்களோ அளவற்றவர்.

பிற்பகல் 4 மணிக்கு மதுரை இரயில் சந்திப்பிலிருந்து ஒரு பெரிய ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலம் தொடங்கிய இடத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் நாலா பக்கங்களிலும் மக்கள் குழுமியிருந்தனர். **தொண்டர்களும் காவல் துறையினரும் கூட்டத்தைக் கட்டுப்படுத்தினர். நடுநாயகமாக நான்கு குதிரைகள் பூட்டிய அலங்கார இரதத்தில் தாமரைப் பீடத்தின் மீது திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் வீற்றிருக்க முன்னும் பின்னும் இரு பக்கங்களிலும் ஜனத்திரள், "வாழ்க எம்.ஜி.ஆர்." என்று வாழ்த்தொலி முழக்க, வீர இரதம் பவனி சென்றது.**

110 சவரன்களால் ஆன தங்கவாள்

இரதத்தின் முன்னே சென்ற உலக உருண்டையின் மீது தங்கவாள் சுழன்று ஒளி வீசியது. 110 சவரன்களால் செய்யப்பட்ட அந்த வாள் அற்புதமான வேலைப்பாடு கொண்டிருந்தது. அதனை அலங்கார உறை தன்னகத்தே தாங்கியிருந்தது. உறையிலே கல் பதிக்கப்பட்டு ஒளி வீசியது.

சுமார் ரூ.12,000-க்கு மேல் (அப்போதைய மதிப்பு) (இப்போதைய மதிப்பு சுமார் 13 லட்ச ரூபாய்) பெறுமானமுள்ள தங்க வாளைப் பார்த்து வியப்புறாதவர் இல்லை. முன்னே யானைகள், மாடுகள் அணியுடன் செல்ல, தொடர்ந்து பல ஊர்களையும் சேர்ந்த பல்வேறு மன்றத்தினர் மணித்தோரணக் கொடிகளுடன் அணிவகுத்துச் சென்றனர்.

எத்தனை மலர் மாலைகள் எம்.ஜி.ஆர். அவர்களின் மீது சூட்டப்பட்டன என்று கணக்கிட்டுக் கூறிவிட முடியாது. கைத்தறி ஆடைகளும் கணக்கில் அடங்காதவாறு அணிவிக்கப்பட்டன. எம்.ஜி.ஆர். அவர்கள் தம்மைக் காணத் துடிக்கும் ரசிகப் பெருமக்களையெல்லாம் மலர்ந்து நோக்கியவாறே ஊர்வலம் சென்றார். தமக்கேயுரிய அன்புச் சிரிப்பை அவர் முகம் வெளிக்காட்டிய வண்ணம் ஒளி படைத்து விளங்கிற்று. இரு கரங்களையும் கூப்பியபடித் தமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டே சென்றார்.

பாண்டிய மன்னர்கள் பவனி சென்ற பழம் பெரு வீதிகளிலே கலைப்புரவலர் பவனி சென்ற காட்சி சரித்திரத்தில் புதுமையைத் தோற்றி வைத்தது. வீதியெங்கும் தோரணங்கள் அணி வீசின.

"புரட்சி நடிகரே வருக!"
"மக்கள் கலைஞரே! வருக!"
"வாரி வழங்கும் பாரி வள்ளலே! வருக!"
"கொள்கை வீரரே! குணசீலரே வருக!"
"கலையுலகக் காவலரே வருக!"

என்று இவ்விதம் பல சிறப்புரைகள் பொறித்த வண்ணச் சீலைகள் அலங்கார வளைவுகளின் மீது தொங்கவிடப் பட்டிருந்தன.

ஊர்வலத்தின் முன்னும் பின்னும் இரண்டு சினிமாப் படப்பிடிப்புக் கருவிகள், தாம் கண்ட மாபெருங் காட்சிகளையெல்லாம் படம் பிடித்துச் சென்றன. 'நாடோடி மன்னன்' சினிமாவின் ஒளிப்பதிவாளர் திரு.ஜி.கே. ராமு அவர்களும், திரு. சண்முகம் அவர்களும் 'காமிரா'வுக்குள் அந்தக் காட்சிகளைச் சிறைபிடிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இரட்டைவேடம் – இருமுறை யானை மாலை

சிலம்ப விளையாட்டுக்களும் ஊர்வலத்தின் முன்னே நடைபெற்றன. **வீரவேழம் ஒன்று கலைக்காவலர் எம்.ஜி.ஆருக்கு இருமுறை மாலை சூட்டிப் போற்றியது. 'நாடோடி மன்னனில்' எம்.ஜி.ஆர். அவர்கள் இரட்டை வேடம் ஏற்றிருந்த காரணத்தால் யானை இரு முறை மாலை சூட்டியது என்று மக்கள் மகிழ்வுடன் பேசிக் கொண்டனர்.** குறிப்பிட்ட பாராட்டுக் கூட்டம் நிகழும் இடமான தமுக்கம் மைதானத்தை இரதம் நெருங்குவதற்கு 3.30 மணி நேரம் ஆயிற்று. மூன்றரை மைல் தூரத்தில் உள்ள அவ்விடத்தை 10 மைல் தூரம் பல வீதிகளிலும் சுற்றிய வண்ணம் 7.30 மணிக்குச் சென்றடைந்தது.

திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இரண்டு லட்சம் மக்கள் முன்னிலையில் ஓங்கியுயர்ந்ததோர் மேடையின் படிகளில் ஏறி வருவதைக் கண்டதுமே பெருங் கரகோஷமும், வாழ்த்தொலிகளும் முழங்கலாயின. எம்.ஜி.ஆர். அவர்கள் எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்துத் தம் இடத்தில் வந்தமர்ந்தார்.

அன்று காலையிலேயே சென்னையிலிருந்து சட்டமன்றத் தலைவர் **திரு. யு. கிருஷ்ணாராவ்** அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் **திரு. வி.கே. ராமசாமி முதலியார்** அவர்களும் வந்திருந்தனர். மற்றும் திருவாளர்கள் **பி.டி. இராசன், எஸ்.எஸ். இராஜேந்திரன், ம.கி. சண்முகம் (தியாகராயக் கல்லூரி முதல்வர்) கே.ஆர். ராமசாமி, இரா. நெடுஞ்செழியன், கவிஞர் கண்ணதாசன், மா. இராசமாணிக்கனார், தி. க. பகவதி, டி. எஸ். துரைராஜ், என்.எஸ். நாராயணன், ஏ.எஸ்.ஏ. சாமி, டி.வி. நாராயணசாமி** முதலிய அறிஞர்களும், கலைஞர்களும், எம்.ஜி.ஆர். அவர்களைப் பாராட்டுவதற்காக வருகை புரிந்திருந்தனர். மற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்கள் பலரும், திரையுலகக் கலைஞர்களும் விசேட அழைப்பினர்களாக வந்திருந்தனர்.

கழகத்தின் சொத்து மதுரை எஸ். முத்து

இந்த மாபெரும் விழாவை நிர்வகித்து நடத்தும் பொறுப்பை ஒரு குழுவினர் ஏற்றிருந்தனர். அக்குழுவின் முக்கியச் செயலாளர்களாகத் **திரு. எஸ். முத்து(எம்.சி.)**

அவர்களும், திரு. துரை அரசு அவர்களும் பொறுப்பேற்றுப் பெரும்பணி புரிந்தனர். மாபெருங் கூட்டத்தையும், ஊர்வலத்தையும் நடத்திய பெருமை இவர்களையே சாரும்.

கூட்டத்தைத் துவங்கும் முறையில் திரு. எஸ். முத்து அவர்களை எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். சட்டமன்றத் தலைவர் திரு. யு. கிருஷ்ணாராவ் அவர்கள் விழாவைத் துவக்கி வைத்தார். **'திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தலைசிறந்த நடிகர் என்றும், அவரது பண்பட்ட நடிப்பும், அன்புமிக்க பேச்சும், நல்லொழுக்கமும் எண்ணற்ற மக்களின் இதயங்களில் இடம்பெற்றவை'** *என்றும் கூறிப் போற்றினார்.*

விழாவுக்குத் தலைமை தாங்கிய பி. டி. இராசன் அவர்கள் தமது உரையில் **திரு. எம்.ஜி.ஆர். நாட்டின் சிறந்த கலைஞன் என்பதுடன் சிறந்த தொண்டராகவும் பணியாற்றிவரும் உழைப்பளர் என்றும், அவருக்குத் 'தங்க வாள்' பரிசளிப்பது தக்கதோர் செயலென்றும் கூறினார்.**

நாவலர் இரா. நெடுஞ்செழியன்

இதன்பின் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மக்கள் சார்பில் திரு. எம்.ஜி.ஆர். அவர்கட்கு மலர் மாலை சூட்டியபின், தங்க வாளை உறையிலிருந்து எடுத்து உயர்த்திப் **பிறகு திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் கரங்களிலே சேர்ப்பித்தார்.** *இலட்சக்கணக்கான மக்களின் மகிழ்ச்சி ஒலிகளுக்கிடையே தங்கவாளை எடுத்து உயர்த்திக் காட்டினார் புரட்சி நடிகர். 'எம்.ஜி.ஆர். வாழ்க' என்ற வாழ்த்தொலி, ஒரே குரலாய் ஒலித்தது.*

இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர்.

பின்னர் இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராஜேந்திரன் பாராட்டுரை வழங்கினார். அவர் பேசுகையில், **'இந்தத் தங்கவாள் தன் அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அளிக்கப்பட்டதில் தனக்கு அளவு மீறிய மகிழ்ச்சி என்றும் திரையுலகக் கலைஞர் ஒவ்வொருவரும் இந்தத் தங்கவாள் தங்களுக்கு அளிக்கப்பட்டதாக நினைப்பர்'** *என்றும் கூறினார். நாடக, சினிமாக் கலைஞர்களின் மதிப்பு இன்றைய நிகழ்ச்சியின் மூலம் நன்கு உயர்ந்திருக்கிறது என்றும் மக்களிடையே*

பெருமதிப்புடன் கலைஞர்கள் வாழும் நல்ல நாள் பிறந்துவிட்டது எனவும் கூறி, முடிவில் "புரட்சி நடிகர்" என "வாழ்க" என்று மக்கள் மும்முறை வாழ்த்தினர்.

சென்னை, தியாகராயக் கல்லூரி முதல்வர் திரு. ம.கி. சண்முகம் பேசுகையில் நாட்டு மக்களின் உள்ளம் கவர்ந்த கலைஞர் எம்.ஜி.ஆர். என்றும், அவரது திருக்கரங்களால் வளர்ந்த பல கலை நிலையங்களுள் தியாகராயக் கல்லூரியும் ஒன்று என்றும் கூறினார்.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி

நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி அவர்கள், "**உலகக் கலைஞர்கள் செய்யாத பல செயல்களை ஆற்றியவர் எம்.ஜி.ஆர். அவருக்குத் தங்கவாள் மட்டுமல்லாது வைர வாளும் பரிசளிக்கப்பட வேண்டும். அப் பரிசு அறிஞர் அண்ணா அவர்களால் புரட்சி நடிகருக்கு வழங்கப்படப் போகிறது**" என்று குறிப்பிட்டார். அடுத்து சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் திரு. வி.கே. ராமசாமி முதலியார் அவர்கள் எம்.ஜி.ஆர். அவர்களைப் பாராட்டுங்கால், நடிப்பாலும், உழைப்பாலும் உயர்வு பெற்றவர் எம்.ஜி.ஆர். என்றும், அவரால் பயன்பெற்றுவரும் இந்நாடு அவரைப் பாராட்டுவது முறையென்றும் அவர் நீடு வாழ்ந்து வற்றாத வளத்துடன் விளங்க வேண்டும் என்றும் கூறினார்.

திரு டி.கே. பகவதி அவர்கள் தமது பாராட்டுரையில் "**சட்டமன்றத் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும் இன்றைய விழாவில் கலந்து கொண்டதை இந்நாட்டு அரசாங்கமே கலந்து கொண்டதாக எண்ணுகிறேன். அரசியல் பிரதிநிதிகளின் நல்வாழ்த்துக்களை அரசாங்கத்தின் பொன் வாழ்த்துக்களாக மதிக்கிறேன். திரு. எம்.ஜி.ஆர். அவர்களை இன்று மக்கள் போற்றவும், மக்கள் பிரதிநிதிகள் போற்றவும், மாநிலக் காவலர்கள் போற்றவும் நான் காணும் காட்சி என்னை மகிழ்விக்கிறது**" என்று கூறினார். மேலும் அவர் கூறுகையில், திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தமது விடாமுயற்சியாலும் - உழைப்பாலுமே இன்று இத்தகைய உயர்ந்த நிலையை எய்தினார் என்றும், நல்லொழுக்கமுள்ள ஒரு பெருங்கலைஞர் என்றும் குறிப்பிட்டுப் பேசினார்.

டைரக்டர் ஏ.எஸ்.ஏ. சாமி

பிரஜா சோஷியலிஸ்டு கட்சியைச் சேர்ந்த **திருமதி விசயலட்சுமி** அவர்கள் பேசியபோது, 'நாடோடி மன்னன்' திரைப்படத்தை மிகவும் போற்றியுரைத்தார். மக்கள் வாழ்வின் மலர்ச்சிக்கு வழி வகைகளை 'நாடோடி மன்னன்' மூலம் வழிவகுத்துக்காட்டிய ஒப்பற்ற கலைஞர் திரு. எம்.ஜி.ஆர். என்றும், 'தூங்காதே தம்பி' என்ற பாட்டு சிறந்த படிப்பினையுடையது என்றும் சிறப்பித்தார்.

டைரக்டர் ஏ.எஸ்.ஏ.சாமி அவர்கள் பேசுகையில் எம்.ஜி.ஆர். அவர்களின் வள்ளல் குணத்தைப் பற்றி விளக்கிப் பேசியதுடன், 'டைரக்ஷன்' திறமை பற்றியும் பாராட்டியுரைத்தார். 'விளம்பரம் இல்லாமல் வண்கை* (வாரி வழங்குதல்) செய்யும் வள்ளல்' என்று அவர் குறிப்பிட்டார்.

பின்னர் நகைச்சுவை நடிகர் **டி.எஸ். துரைராஜ்** அவர்கள் பேசினார்ர். மக்களிடையே சிரிப்பைத் தூண்டியவாறு அவர் பேசுகையில், 'நாட்டுக்குச் சேவை செய்ய நாகரிகக் கோமாளி வந்தானய்யா' என்று பாடியவாறு கலைவாணர் தோன்றி அருந்தொண்டுகள் புரிந்தார் அன்று. இன்று நாட்டுக்குச் சேவை செய்ய '**நாடோடி மன்னன் வந்தாரய்யா**' என்று பாடும்படி வந்திருக்கிறார் எம்.ஜி.ஆர். எனப் பாடிக் காட்டினார். ஒரே ஆரவாரச் சிரிப்பு மூண்டது மக்களிடையே. M.G.R. என்ற மூன்று ஆங்கில எழுத்துக்களில் 'M' என்பது 'Man' என்பதையும் 'G' என்பது 'Gold' என்பதையும் 'R' என்பது ராமச்சந்திரன் என்ற பெயரையும் குறிப்பதாகவும், "**மனிதருள் தங்கமான ராமச்சந்திரன்**" என்று விளக்கப்படுத்திப் பொருள் கூறும்படி அப்பெயர் அமைந்திருக்கிறது எனவும் அவர் பலருடைய நகை ஒலியூடே உரைத்தார்.

பிறகு தமிழ்ப் பேராசிரியர் **திரு. மா. இராசமாணிக்கனார்** பாராட்டுரை வழங்கியபோது, 'நாடோடி மன்னன்' திரைப்படத்தைத் தாம் பார்த்துப் பெரிதும் சுவைத்ததாகவும், இப்படத்தில் எம்.ஜி.ஆர். மேற்கொண்டுள்ள இரட்டை வேட

---

* 'மாகவானிகர் வண்கை மாநாய்கன்', சிலப்பதிகாரம், புகார்காண்டம், மங்கல வாழ்த்துப் பாடல், வரி. 23.

நடிப்பு தமிழகம் காணாத புதுமையென்றும், நான்கு மொழி நடனம் அற்புத அமைப்பு என்றும் இயற்கைக் காட்சிகளின் படப்பிடிப்பு மிகச் சிறப்புடையது என்றும் கூறினார். மேலும் அவர் பேசுகையில் கலைஞர்கள் நல்ல தமிழ் பேசுகின்றனர் என்றும் கூறினார்.

அடுத்து நடிகர் சங்க முன்னாள் தலைவர் **திரு. என்.எஸ். நாராயணன்** அவர்கள் பேசுகையில் **நாடகக்காரர்களும் நாடாளும் சக்தி பெற்றவர்கள்** என்பதை நாடோடி மன்னன் படத்தின் மூலம் எம்.ஜி.ஆர். அவர்கள் வகுத்துக்காட்டி விட்டார்கள் என்றும், விடாமுயற்சியுடன் கருமமே கண்ணாக உழைக்கும் கலைத்தொண்டர் எம்.ஜி.ஆர். என்றும் கூறினார்.

கவிஞர் கண்ணதாசன் பேசுகையில் தங்க வாள் என்றென்றும் திரு.எம்.ஜி.ஆரிடம் தங்கி ஒளிர வேண்டும் என்றும், அவருடைய உழைப்பும், கொள்கைகளும் நின்று நிலவ வேண்டும் என்றும் அவர் தன்னடக்கமும், பணிவன்பும் நிறைந்த பெருங்கலைஞர் என்றும் கூறினார்.

பின்னர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் **திரு. எம்.ஜி.ஆர். எல்லோரும் போற்றும் ஒருவராக விளங்குவதன் காரணம் அவரிடம் நிறைந்துள்ள அரிய குணங்களேயாகுமென்றும், அவர் உறுதியுள்ளம், நல்லொழுக்கம், விடாத உழைப்பு, தமிழ்ப் பண்பாடு, வன்மைத் தன்மை முதலான எல்லா நல்ல இயல்புகளும் ஒருங்கே வாய்ந்தவராக விளங்குகிறார் என்றும் கூறினார்.** தங்க வாள் பரிசளிக்கப்படுவது பொருத்தம் என்றும், எம்.ஜி.ஆருக்கு அளிக்கப்பட்ட இவ்வாள் நற்செயல்களுக்குப் பாதுகாப்பாக நிலவுமென்றும் மக்களிடையே மாற்சரியத்தைப் போக்கி நல்ல இயல்புகளை வளர்க்கப் பயன்படும் என்றும் கூறினார்.

தூண்டாமணி விளக்காக ஒளிச்சுடராக

தொடர்ந்து அவர் பேசுகையில் எம்.ஜி.ஆர். அவர்களின் வீர விளையாட்டுக்களைப் படங்களில் காணும்போதும், ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளே போராடுவது போலவும், தங்கள் நெஞ்சைத் தீண்ட வரும் தீய உணர்ச்சிகளை எதிர்த்து வெற்றி கொள்வது போலவும் உணரும்படியான நிலை

ஏற்படுகிறது என்றும் விளக்கியுரைத்தார். நாடோடி மன்னன் என்ற நல்ல கருத்துக்கள் அடங்கிய வெற்றிப் படத்தை உருவாக்கிய எம்.ஜி.ஆர். அவர்கள் **தூண்டாமணி விளக்காக, ஒளிச்சுடராக** என்றென்றும் வாழ்ந்து வளம் பெருக வேண்டுமெனத் தாம் விரும்புவதாகவும் கூறினார். இதன் பின் எம்.ஜி.ஆர். அவர்கள் தமது நன்றியை லட்சக்கணக்கான அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார். ஒரு கலைஞரைப் பாராட்டிய இம் மாபெரும் விழா, தமிழக வரலாறு கண்ட அதிசயமாதலால், பெருமழை பொழிந்தது. மக்களின் வாழ்த்தொலியுடன் இயற்கையின் இன்ப ஒலியும் கலந்து ஒலித்தது. இத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

மறுநாள் காலை ஆயிரத்துக்கு மேற்பட்ட மதுரைப் பிரமுகர்களும், தமிழகத்துப் பெரியோர்களும் திரு.எம்.ஜி.ஆர். அவர்களுடன் சிற்றுண்டி கொண்டபோது, திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் அனைவருக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார். முதல் நாள் விழாவில் நன்றியுரையைச் சுருக்கமாகப் பேசிய காரணத்தால், இந்த நேரத்தை அதற்குப் பயன்படுத்திக் கொண்டு நீண்ட நன்றியுரையைச் செய்தார்.

எம்.ஜி.ஆர். அவர்களின் நன்றியுரையின் ஒரு பகுதி:

"நல்லவர்களின் நல்ல பண்பு என்னைப் பொறுப்புமிக்க ஓர் தொண்டனாக்கி, இத்தகைய பாராட்டையும் தங்கவாள் பரிசையும் எனக்கு அளித்திருக்கிறது. அன்பர்களின் கூட்டுறவினால் வெற்றி பெற்ற படம் 'நாடோடி மன்னன்' என்னுடன் உழைத்தவர்கள் என் கருத்துக்களை ஏற்று நல்ல முறையில் உதவி புரிந்தனர். அதுவே வெற்றியின் அடிப்படைக் காரணமாகும். லட்சக்கணக்கான அன்பர்களின் உள்ளங்களிலே எனக்கு ஓர் தனியிடம் கிடைத்தது. எனது வாழ்நாளிலே நான் பெற்றுள்ள பெரும் பேறு என்று மதிக்கிறேன்.

தங்க ஆசையைத் தகர்த்தெறிந்து வாழ்

நல்லவனாக வாழ முயற்சி செய்பவன் நான் என்ற காரணத்தாலேயே என்னை மக்கள் போற்றுகிறார்கள். அந்த நல்லெண்ணத்தை நான் என் வாழ்நாளின் எச்சரிக்கையாகக்

கொண்டு பணியாற்ற விரும்புகிறேன். பொன்வாள் பரிசளித்ததற்கு நான் கொண்ட விளக்கம் இதுதான்: மனித இயல்பு பொன் மீது ஆசை கொள்வது. ஆனால் பொன்னுக்கு நீ அடிமையாகக் கூடாது. அதை நீ அடிமைப்படுத்த வேண்டும். மற்றவரை வாழவிடு! நீயும் வாழ்! தங்கவாளைக் கொண்டு தங்க ஆசையைத் தகர்த்தெறிந்து வாழ்!" என்று கூறுவது போலவே எனக்குத் தங்கவாளை அளித்துள்ளனர் என்று எண்ணுகிறேன்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு 11 சவரன்கள்

இவ்வாறு பல அரிய உண்மைகளை எடுத்துரைத்ததுடன், திரு.எம்.ஜி.ஆர். அவர்கள், மதுரை செட்டியார் பிலிம்ஸார் அன்று காலை அளித்த அன்புப் பரிசான பதினொரு சவரன்களையும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார். தன்னை வளர்த்து ஆதரித்த தமிழ்த்தாய்க்குத் தன் வாழ்நாள் எல்லாம் பணியாற்றுவதே தன் இலட்சியம் என்றும் கூறினார். மேலும் 'கச்சா பிலிம்' இறக்குமதிக் கட்டுப்பாடு தவிர்க்கப்பட வேண்டும் என்றும், கலையும், கலைஞர்களும், கலாச்சாரமும், நாட்டிலே போற்றப்படுவதனால் நாடு முன்னேறும் என்றும் விளக்கிக் கூறினார்.

நாட்டைத் திருத்த ஒரு நாடோடி மன்னன் – அறிஞர் அண்ணா

"சமீப காலமாகத் தமிழ்நாட்டிலே 'நாடோடி மன்ன'னைப் போன்ற நல்ல படங்கள் வெளி வந்திருக்கின்றனவா என்று பார்த்தால், வந்த படங்களிலே நல்ல முறையிலே இப்படிப்பட்ட முழு வெற்றியைத் தந்த படம் என்று எதையும் பார்க்க முடியவில்லை.

நண்பர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் நம்முடைய புன்னகையைப் பெறுவதை மட்டுமே இலாபகரமாகக் கொண்டு, நாட்டு மக்கள் மறக்க முடியாத நாட்டு மக்களின் பேராதரவைப் பெறக்கூடிய - நாட்டுக்குத் தேவையான நல்ல கருத்துக்கலை ஓவியத்தை நமக்கு அளித்திருக்கிறார்.

தமிழ்நாட்டு மக்கள் அவருக்குத் தங்கள் அன்பையும், ஆதரவையும் தெரிவித்துக் கொள்வதற்காக மதுரையிலே தங்கவாள் பரிசளித்து மகிழ்ந்தார்கள். அடுத்தபடியாகச் சேலத்திலே வெள்ளி வாள் அளித்தார்கள். சென்னையிலே சர்.

தியாகராயக் கல்லூரியில் ஒரு வீரவாள் அளிக்கப்பட்டது. இப்படிப் போட்டி போட்டுக் கொண்டு அவரைப் பாராட்டுவதன் பொருள் என்ன என்று பார்த்தால் வெகு காலமாக இப்படிப்பட்ட படம் வெளிவந்ததில்லை; மக்கள் எதிர்பார்த்திருந்தபடி அவர் வெற்றிகரமான படத்தைத் தயாரித்து மக்களுக்கு அளித்திருக்கிறார் என்பது தெரிகிறது. அவர் தி.மு.கழகத்தைச் சார்ந்தவர் என்பதனாலே நாங்களெல்லாம் மகிழ்ச்சியடைகிறோம்; பெருமைப்படுகிறோம்; உண்மையிலேயே அவருடைய இந்தப் பெரும் பணியின் பயன் சொல்லுந்தரமன்று.

கலைத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அரசியல் கட்சிகளில் ஈடுபாடு கொள்வதால் அவர்களுடைய கலைத்திறமையே கெட்டுவிடும் எனப் பலர் சொல்லுகிறார்கள். ஆனால் இன்று, ‘நாடோடி மன்னன்’ வெற்றியின் மூலம், இலட்சியப் பற்றும் கொள்கையில் விடாப்பிடியும் கொண்ட எம்.ஜி. இராமச்சந்திரன் கலைத்திறன் குன்றாமல் காட்ட முடியும் என்பதைக் காட்டிவிட்டார்.

நம் கலைத்துறை வெறும் பொழுதுபோக்கு மட்டுமே என்று இல்லாமல், நாட்டுக்கும் அது பயன்படும் என்பதை உணர்ந்து, இனிமேல் எல்லாக் கலைஞர்களும் முயலுவார்கள். அதற்கு இந்த ‘நாடோடி மன்னன்’ படம் ஒரு நல்ல பாடமாக அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இலட்சக்கணக்கான ரூபாய்களை கொட்டித் தமிழில் எடுக்கப்படும் படங்கள் நல்ல கருத்துள்ளவைகளாக, நாட்டுக்குப் பயன்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் எடுக்கப்பட்டால் நாட்டு மக்களின் நல்லாதரவு கிடைப்பது உறுதி என்பதும் நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இலாபம் பார்க்காமல், கலை நோக்கு மட்டும் கொண்டு உள்ளத்திலுள்ள கருத்தை நாட்டுக்கு அளிக்கும் பண்பு வாய்ந்த ஒரு கழகத்தோழர் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சி இது!

இலாபத்தைக் கருதாமல் நாட்டு விடுதலை இலட்சியத்தையும், நல்ல உணர்ச்சியையும் ஊட்டக்கூடிய வகையிலே இந்தப் படத்தைத் தயாரித்து, அதன் மூலம் நம் கழக இலட்சிய வளர்ச்சிக்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித்

தந்திருக்கிறார் எம்.ஜி.ஆர்.

தோழர் இராமச்சந்திரன் மட்டுமின்றி, அவருடன் ஒத்துழைத்த எல்லா நடிக - நடிகையரின் திறமையும் உச்சநிலையில் - ஒரு சேர அமைந்திருக்கிறது. நல்ல நாதம் எழுப்பக்கூடிய வீணையை, திறமைமிக்க வித்துவான் சுருதி குறையாமல் வாசித்தால் எப்படி இன்பம் கிடைக்குமோ, அப்படி நமது 'நாடோடி மன்னன்' படத்தில் அத்தனையும் பொருத்தமாக அமைந்திருக்கின்றன. கத்திச் சண்டையானாலும் காதல் காட்சியானாலும் - எல்லாம் நல்ல முறையிலே அமைந்திருக்கின்றன. கத்திச் சண்டை இது போல வேறு எதிலும் இல்லை; காதல் காட்சி, பண்பு குறையாமல் இப்படி வேறு எந்தப் படத்திலும் இல்லாத வகையில் உள்ளது என்று பார்த்தவர்கள் சொல்லும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

'இதைப் போல உணர்ச்சியூட்டும் வசனம், கருத்துப் பொதிந்த பாடல், இன்பமூட்டும் இசை வேறு எதிலும் இல்லை' என்று ஒவ்வொருவரும் கூறும் வகையில் எந்தக் கோணத்திலிருந்து இப்படத்தை ஆராய்ந்தாலும் அந்தக் கோணத்தில் இதுவரை எதற்கும் கிடைக்காத சிறப்பு இப்படத்திற்குக் கிடைத்திருக்கிறது.

மற்ற படத்தயாரிப்பாளர்களைப் போலத் தனக்கு எல்லாம் தெரியும் என்றில்லாமல், எல்லாம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அக்கறையோடு, மிக அடக்கத்தோடு படம் எடுக்கத் தொடங்கினார் எம்.ஜி.ஆர்.

நான் பல தம்பிமார்களைப் பெற்றிருக்கிறேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையிலே திறமை பெற்றுத் திகழ்கிறார்கள். அவர்கள் தங்கள் திறமையை ஒருபோதும் இழக்கக் கூடாது என்பதுதான் என் எண்ணம். எவரும் கழகத்திலே சேர்ந்து பணியாற்றுவதாலே தங்களுக்குள்ள திறனை இழந்துவிடக்கூடாது; மாறாக, மேன்மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அமெரிக்காவில் நீக்ரோ இனத்தைச் சேர்ந்த பால்ராப்சன் என்னும் உலகப் புகழ்பெற்ற ஒரு பாடகர் இருக்கிறார். அவர் உடல் கறுப்பு - உள்ளம் வெள்ளை. அவருடைய தொண்டு

மகத்தானது. அவர் தன்னுடைய இசைக்கலை மூலம் உலகில் பலரை இன்புறச் செய்கிறார். அவருடைய இசைத் திறனைக்கண்ட உலகத்தினர், 'நீக்ரோ இனத்திலுமா இப்படிப்பட்ட ஒரு பாடகன் இருக்கிறான்?' என்று வியப்புறுகிறார்கள்.

நீக்ரோ இனத்தவர் அடிமைகளாகக் கருதப்பட்டு, பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டவர்கள். அவர்களுடைய விடுதலைக்காகப் பலர் போராடியிருக்கின்றனர்.

அவர்களுக்கு அடுத்தபடியாகத் தாழ்த்தப்பட்ட சமூகமாக நாம் இன்று இருக்கிறோம். இப்படி நம் நாட்டிலும் நல்ல திறமைசாலிகள் உண்டு என்பதைக் காட்ட வேண்டும். நம் நாட்டு மக்களிடையே விடுதலை உணர்ச்சி பரவுமானால், இன்னும் எத்தனை எம்.ஜி.ஆர்கள், வீரப்பாக்கள் கிடைப்பார்கள் என்று எண்ணும் நல்ல எண்ணம் ஏற்பட வேண்டும். அந்த எண்ணம் எதிர்காலத்தைப் பற்றி எண்ணத்தக்க ஒரு நம்பிக்கையூட்டும்.

எம்.ஜி.ஆர். எடுத்த இந்தப் படத்தில் பானுமதியம்மையாரும், சரோஜாதேவியாரும், நம்பியாரும் தமிழ் பேசியிருக்கிறார்கள் என்றால் காரணம் என்ன? பேதம் பாராட்டாத இயக்கம் எம்.ஜி.ஆர். சார்ந்துள்ள கழகம்.

திராவிட இன உணர்ச்சியை ஊட்டக்கூடிய முறையிலே இந்தப் படத்திலே வரும் ஒரு காட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலே பாட்டிசைத்து நாட்டியம் ஆடுகின்ற அந்தக் காட்சியை நான் கூர்ந்து கவனித்தேன். அந்தக் காட்சியின் ரசத்தைப் பருகுவதற்காகக் கவனிக்கவில்லை. அந்தப் பருவத்தை நான் கடந்து விட்டேன். ஆனால் தமிழ் - தெலுங்கு - மலையாள - கன்னட மொழிகளுக்கிடையே ஒருமைக்கோடு ஓடிக் கொண்டிருந்த அவர்களுடைய முகபாவத்தை, நான்கு மொழிகளிடையே எவ்வளவு பந்தம் - பாசம் - ஒட்டு - உறவு இருக்கிறது என்பதைக் கண்டேன்.

நாட்டுக்குப் பிடித்தமான நல்ல படமாக அங்குலத்துக்கு அங்குலம் ஒரு நோக்கத்தோடு எந்தப் படத்தை எடுத்தாலும் அது ஓடும். 'படம் ஓடவில்லையே' என்று வருந்தும் சில

தயாரிப்பாளர்கள், 'மக்களுக்கு ரசிக்கத் தெரியவில்லை; அதனால் தான் உயர்ந்த படமாக எடுத்தும் அது ஓடவில்லை' என்கிறார்கள். தயாரிப்பாளர்கள் கூறுவது போல மக்களுக்கு ரசிக்கத் தெரியாமலில்லை; மக்கள் விரும்பும் நல்ல நோக்கம் படத்தில் இல்லை என்பதால் தான் படங்கள் ஓடுவதில்லை.

நண்பர் இராமச்சந்திரன் இந்தப் படத்தைத் தயாரித்த நேரத்தில், 'இன்ன நோக்கத்தோடு படம் எடுக்கிறேன்' என்று என்னிடம்கூடச் சொல்லவில்லை. அவர் சொல்லாததற்குக் காரணம், வழக்கமாக அவருக்கிருக்கின்ற கூச்ச சுபாவம்தான்.

தாய், குழந்தையைப் பெற்றெடுத்து அழுக்குப் போக்கிப் பிறகு தன் கணவனிடமோ, மூத்த மகனிடமோ காட்டுவது போல, தோழர் எம்.ஜி.ஆர். அவர்களும் தான் பெற்றெடுத்த கலைச்செல்வத்தை நோக்கம் கெட்டுவிடாமல் அழுக்கு நீக்கி என்னிடமும், உங்களிடமும் காட்டியிருக்கிறார். இதைப் பார்த்து 'நன்றாக இல்லை' என்று யார் சொல்ல முடியும்? 'உன்னைத் தவிர இத்தகைய கலைச் செல்வத்தை வேறு எவரால் பெற முடியும்? நீ பெற்ற செல்வம் அழகு இல்லாமல் அவலட்சணமாகவா இருக்கும்?' என்று நாம் அவரைப் பார்த்துக் கேட்கின்ற நிலையிலே இருக்கின்றோம்.

தோழர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய உள்ளம் பெரிது! அவருடைய கலைத்திறமை பெரிது! கழகத்தின்பால் அவர் பெற்றுள்ள ஈடுபாடு வேறு. எதில் பெற்றிருந்தாலும் அதில் சிறப்பு இருக்கும். அவருடைய குணம் தங்கம் போன்றது. தங்கத்தை உருக்கி என்ன பொருள் செய்தாலும் அழகாக இருப்பது போல, அவருடைய நேர்மையான உள்ளம் அவர் எதில் ஈடுபட்டாலும் வெற்றி காணச் செய்யும்.

ஒருவர் நல்ல உள்ளத்தோடு எதில் ஈடுபட்டாலும், அத்துறையில் மற்றவர்களுக்கு வழிகாட்டக்கூடிய வகையிலே முன்னேற முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் எம்.ஜி.ஆர். அவருடைய நடிப்பைப் பார்த்தால் எவருக்கும் நல்ல உள்ளம் ஏற்படும்.

கருத்தைக் கலையிலே காட்ட முடியும் என ஒரு நல்ல செயலைச் செய்து காட்டிய படம் 'நாடோடி மன்னன்'.

இப்படத்தைப் பற்றி இதன் வெற்றியைப் பற்றி இன்னும் பல காலத்துக்கு மக்கள் பேசக்கூடிய ஒரு நல்ல படம். இனிமேல் படம் எடுப்பவர்களையும் ஒரு நல்ல கருத்தை அடிப்படையாக வைத்து எடுப்பதற்குத் தூண்டக்கூடிய படம் இது. பண்பு குறையாமல் காதல் காட்சியைக் காட்ட முடியும் என்பதற்கு வழிகாட்டி இப்படம்.

வியக்கத்தகும் சண்டைக் காட்சிகள் நிறைந்த படம் மட்டுமல்ல இது; உள்ளத்திலுள்ள சங்கடத்தை முகத்தில் எப்படிக் காட்ட முடியும் என்பதைத் தோழர் எம்.ஜி.ஆர். மன்னனாக மாறி நடிக்கும்போது, உண்மைக் கணவனென எண்ணி, இராணி தன்னிடம் கொஞ்சும்போது தனது உள்ளத்திலுள்ள வேதனையை முகத்தில் வெளிப்படுத்தும் அவர் நடிப்பு உச்சத்தை எட்டிப் பிடிக்கின்றது.

தோழர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நடிப்பில் சிறந்த திறமை இருக்கிறது. எம்.ஜி.ஆர். நடிக்கிறார் என்றால் வெறும் கத்திச் சண்டை மட்டுமே அந்தப் படத்தில் எடுக்கிறார்கள் என்று சிலர் எண்ணுகிறார்கள்.

'நாடோடி மன்னன்' வெறும் கோட்டையைத் தாக்கிக் கொடி மரத்தைச் சாய்க்கின்ற சண்டைப் படம் மட்டுமல்ல; ஒரு கொடுங்கோல் மன்னனை வீழ்த்தி, மக்களுக்கான திட்டம் தீட்டித் தரக்கூடிய அரசியல் பாடம் கற்பிக்கின்ற ஒரு நல்ல படம்.

நம் நாட்டில் உள்ள மக்கள் சினிமாப் படத்தின் மூலம் தெரிந்து கொள்ள வேண்டிய பல உண்மைகள் இருக்கின்றன.

மக்கள் உள்ளத்தில் இருப்பதை அறிந்து கொள்ளக்கூடிய கலைஞர்கள் வேண்டும். உள்ளத்தை ஆராய்கின்ற இடத்திலே மக்கள் மத்தியிலே கலைஞர்கள் இருக்க வேண்டும். கலைஞர்கள் தங்களுக்குப் பிடிக்கின்ற ஏதாவது ஒரு கட்சியில் இருக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான் கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டி எடுக்கப்படும் படம் நாட்டுக்குப் பயன்படும்.

தோழர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தங்க உள்ளத்தைப் பாராட்டத்தான் அண்மையில் மதுரையில் - முத்தமிழ்ச் சங்கம் முழங்கிய மதுரையம்பதியில் - நற்றொண்டர்கள் நிறைந்த அந்தத்

திருநகரில் தங்கவாள் பரிசளித்தார்கள்; தங்கம் போன்ற மனம் படைத்தவர் என்றும் பிரகாசிக்கட்டும் என்று தான் தங்கவாளைத் தந்தனர்.

இலட்சியத்திற்கு ஏற்படும் எதிர்ப்புகளை எதிர்த்தொழிக்கும் வாளாக அது இருக்கட்டும். அவர் பெற்ற புகழ் நாம் பெற்ற புகழாகும்; நாம் பெற்ற புகழ் நாட்டுக்குச் சொந்தம்; நம் ஒவ்வொருவருக்கும் அவர் புகழிலே பாத்தியம் உண்டு; நம் நாட்டின் தலைசிறந்த மகனாக அவரைக் கருதுகிறோம்.

தோழர் எம்.ஜி.ஆர். அவர்களின் கலை ஆர்வமும், கழகப்பற்றும், சிறந்த பண்பும், பொது வாழ்வில் அக்கறையும் ஒன்றுக்குப் பத்து மடங்கு ஓங்கி வளரும் என்பது உறுதி.

கழகம் பெற்றிருக்கின்ற தோழர்களில் ஒருவர் எம்.ஜி.ஆர். என்ற முறையில், கழகம் சார்பில் அவரைப் பாராட்டி, நன்றி கூறி, வாழ்த்துகிறேன்" என்று அறிவுலக மேதை அறிஞர் அண்ணா, 'நாடோடி மன்னன்' திரைப்படத்தின் புகழினைக் காவியமாக்கிக் காட்டினார்கள்.

தமிழகத்தில் 'நாடோடி மன்னன்' – வெற்றி விழா 30.11.1958

நவம்பர் 30-ஆம் நாள் சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் இலட்சக்கணக்கான பொதுமக்களின் முன்னிலையில் நாடோடி மன்னன் வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்து இவ்விழாவை மிக்க சிறப்புடன் நடத்திக் கொடுத்தார்கள்.

மாலை 5 மணி அளவில் ஆரம்பமாகிய விழாவின் முதல் நிகழ்ச்சியாக, கிளாரினெட் நாதமணி ஏ.கே.சி. நடராஜன் குழுவினரின் இன்னிசை முழங்கியது. பின்னர் திரு. சீர்காழி கோவிந்தராஜன் வணக்கப்பாடல் பாடியதும், எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிறுவன நிர்வாகி திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் எல்லோருக்கும் நல்வரவேற்புக் கூறினார்:

'நாடோடி மன்னன் வெற்றிவிழா' மக்கள் மன்றத்தின் முன்னிலையில் கூட்டப்பட்டதின் குறிக்கோள், மக்களின் பேராதரவு பெற்று, இதுகாறும் இத்தகையதொரு வெற்றி

பெற்ற படமாக எதுவும் அமையவில்லை என்று மக்களாலேயே தீர்ப்பு வழங்கப்பட்ட படம் நாடோடி மன்னன் என்பதை மனத்திற் கொண்டு, அந்தப் பெருமக்கள் முன்னிலையிலேயே படப்பிடிப்பின் பல துறைக் கலைஞர்களுக்கும், நடிக நடிகையர்களுக்கும் அன்புச் சின்னங்களான பரிசுகளை வழங்க வேண்டும் என்ற எங்களின் ஆர்வமேயாகும்.

மறுமலர்ச்சியூட்டும் காவியம்

“மேலும் நாடோடி மன்னன் தமிழ்த் திரைப்பட வரலாற்றிலேயே ஒரு புதிய திருப்பத்தை உண்டு பண்ணியது. எம்.ஜி.ஆர். என்ற தனி மனிதரின் திறமிக்க உழைப்பால் உருவான திரைச்சித்திரம் இது. பல படங்களில் நடிப்பவர் தாமே ஒரு படத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு, பட வெளியீட்டுக்கு முன் ஆறு மாத காலம் அரும்பாடு பட்டு உழைத்துப் பதினெட்டு லட்சம் ரூபாய்களைச் செலவு செய்து, மக்கள் வாழ்வில் **மறுமலர்ச்சியூட்டும்** இக்காவியத்தைப் படைத்தார். இதுவரை வசூலில் கடைசி எல்லை என்று கூறப்பட்ட **‘மதுரை வீரன்’** என்ற படத்தின் 180 நாளைய வசூலை நாடோடி மன்னன் நூறே நாட்களில் பெற்றிருக்கிறது. மேலும் ‘நாடோடி மன்னன்’ வெளியிடப்பட்ட தியேட்டர்களிலெல்லாம் படம் பார்க்க இடம் கிடைக்காமல் திரும்புகின்ற கூட்டத்தினரை, இதர தியேட்டர்கள் திரு. எம்.ஜி.ஆர். நடித்த வேறு படங்களைக் காட்டுவதன் மூலம் திருப்தி செய்து நல்ல வசூலையும் பெறும் முயற்சியில் ஈடுபட்டன. **எம்.ஜி.ஆர். நடித்த படங்களில் ஆறு அல்லது ஏழு படங்கள் ஏககாலத்தில் ஒரே நாளில் காட்டப்பட்டதென்றால், இது ஒரு அதிசயமென்பதோடு, இதுவரை வேறு எந்தப் படமும் விளைவித்திராத புதுமை என்றும் கூற வேண்டும்.**

“100-ஆம் நாள் விழா என்று குறிப்பிடாமல் ‘வெற்றி விழா’ என்று நாங்கள் குறிப்பிட்டதற்குக் காரணம் ஈண்டு நான் கூறிய இவ்வித நல்விளைவுகளேயாகும்” என்று மக்களின் மகிழ்ச்சி ஒலிகளிடையே எடுத்துரைத்தார். அவரது வேண்டுகோள் அறிவிப்பை ஏற்று அறிஞர் அண்ணா அவர்கள் எம்.ஜி.ஆர். நிறுவனத்தின் சார்பில் கலைஞர்கட்குப் பாராட்டு ஷீல்டுகளையும், மோதிரங்களையும் பரிசாக அளித்தார்.

படத்தில் நடித்த நடிகையர் பானுமதி, எம்.என். ராஜம், பி. சரோஜாதேவி, ஜி. சகுந்தலா ஆகியோரும், நடிகர்கள் பி.எஸ். வீரப்பா, எம்.என். நம்பியார், சந்திரபாபு முதலியோர்களும் விழாவில் கலந்து கொண்டு நேரில் பரிசுகளைப் பெற்றுக் கொண்டு மகிழ்ந்தனர். மற்றும் ஒலி, ஒளி முதலான எல்லாக் கலைத்துறைகளின் நிபுணர்களும் பரிசு பெற்றுக் கொண்டனர். 25 ஷீல்டுகளும் 150 மோதிரங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

பி. நாகிரெட்டியார்

'நாடோடி மன்னன்' படமெடுக்கப்பட்ட வாகினி ஸ்டுடியோவின் தலைவர் திரு. பி. நாகி ரெட்டியார் அவர்களுக்கும் எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிறுவனத்தின் சார்பில் அன்புச் சின்னமொன்றை அறிஞர் அண்ணா அவர்கள் வழங்கினார்.

டாக்டர் மு.வ.

பின்னர் பெரியோர்களின் கருத்துரைகள் நிகழ்ந்தன. பேராசிரியர் **திரு. மு. வரதராசனார், திரு.வி.பி. ராமன், (உயர் நீதிமன்ற நீதிபதி) திரு. பஷீர் அகமது சயீது, கலைஞர் திரு. வி. நாகையா, திரு. சாண்டில்யன், திரு. ச. கிருஷ்ணய்யர்** முதலியவர்கள் பாராட்டுரை வழங்கினர். 'நாடோடி மன்னன்' படத்தின் சிறப்பையும், திரு. எம்.ஜி.ஆர். அவர்களது முயற்சியின் வெற்றியையும் குறித்துப் போற்றினர்.

ராஜா சந்திரசேகர்

பின்பு, திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் டைரக்ஷன் துறையில் தனக்கு ஆதி நாளில் ஆசானாக விளங்கியவர் திரு. ராஜா சந்திரசேகர் என்று அறிவித்து, ரூ.5,000-த்துக்கு ஒரு செக்கை அவரிடம் அன்பின் காணிக்கையாக வழங்கினார்.

பின்னர் அறிஞர் அண்ணா அவர்களின் மேலான சொற்பொழிவு நிகழ்ந்தது. **'நாடோடி மன்னன்' நல்ல பண்புகளின் திரைச் சித்திரம் என்றும், கழகத்தின் சீரிய இலட்சியங்களுக்குச் சின்னம் என்றும் பல கோடி மக்களின்**

பாராட்டுக்களைப் பெற்ற எம்.ஜி.ஆர். அவர்களின் சிறந்த பணியை இந்நாடு என்றென்றும் மறாவது என்றும் கூறினார்.

இதயக்கனி

எம்.ஜி.ஆருக்கும் எனக்கும் இருக்கிற தொடர்பை நாடு அறியும். எம்.ஜி.ஆரைப் பாராட்டுவது - என்னை நானே பாராட்டிக் கொள்வதாகக் கருதப்படும்.

உண்மைதானே!

எம்.ஜி.ஆர். என்றால் அவர் தாங்கியுள்ள கொள்கை எது என்பதை நாடு அறியும்.

முல்லைக்கு மணம் உண்டு என்பதைக் கூறிடவா வேண்டும்

இந்தக் கனி தங்கள் மடியில் விழாதா என்று பலர் எதிர்பார்த்தனர்.

அது என் மடியில் வந்து விழுந்தது.

என் இதயத்தில் எடுத்து வைத்துக் கொண்டேன்! என்று அறிஞர் அண்ணா உரையாற்றினார்.*

திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தமது நன்றியுரையின்போது கூறுகையில், தாம் சார்ந்துள்ள கழகத்தின் உன்னத கொள்கைகளை அமைத்து - அதைத் திரைப்படமாக்கி அளித்ததாகவும், அதற்குக் கிடைத்த பெரு வெற்றி கழகத்தின் வெற்றி என்றே தாம் கருதுவதாகவும், மக்கள் நலம் நாடும் பணியே தன் வாழ்வின் குறிக்கோளாகக்

---

* அறிஞர் அண்ணா இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு, சென்னை மத்திய சிறையில் இருந்தபோது 1964 மார்ச் 14—இல் எழுதிய நாட்குறிப்பினை, 'காஞ்சி' நவம்பர் 15, 1964 இதழில் அண்ணா இதனை திரும்பவும் நினைவூட்டியுள்ளார். அந்த வைரவரிகள் இதோ . . .

கழகத்துக்கும் எம்.ஜி.ஆருக்கும் அமைந்துவிட்ட பாசம் சொல்லிக்கொடுத்து ஏற்பட்டது அல்ல; தூண்டிவிட்டுக் கிளம்பியதும் அல்ல; அது தானாக மலர்ந்தது! 'கனி என் கரத்திலே வந்து விழுந்தது' என்று பெருமிதத்துடன், 'நாடோடி மன்னன்' திரைப்பட வெற்றி விழாக் கூட்டத்திலே நான் பேசியது என் நினைவிற்கு வந்தது. **அவர் கழகத்தைத் துறந்துவிடுவதோ - கழகம் அவரை இழந்து விடுவதோ - நினைத்துக்கூடப் பார்க்கக் கூடாது.**

கொண்டிருப்பதாகவும் கூறினார். 'வாழ்க அறிஞர் அண்ணா! வாழ்க எம்.ஜி.ஆர்.!' என்ற வாழ்த்தொலிகள் விண்ணதிர ஒலி செய்தன.

எல்லா வகையிலும் சிறந்த படம்

நாவலர் இரா. நெடுஞ்செழியன் கூறுகிறார் இதோ . . .

"உலகில், மன்னர்களெல்லாம் நாடாடிகளாக ஆக்கப்பட்டு, நாடோடிகளைக் கொண்டு மக்களாட்சி நிறுவப்படும் இக்காலத்தில், நாடோடியை மன்னனாக்கி அம்மன்னனைக் கொண்டு மக்களாட்சியை நிறுவும் புரட்சிகரமான திட்டத்தைப் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமது புதுமைப் படமான 'நாடோடி மன்ன'னில் புகுத்தியிருப்பது வியந்து பாராட்டுக்குரியதாகும்.

ஒரு நல்ல நாட்டிற்குத் தேவையான நல்லாட்சி முறைகளையும், நல்லாட்சிக்குத் தேவையான நல்ல பல திட்டங்களையும், நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நல்ல உள்ள உரமும், நேர்மைத் திறமும் படைத்த நல்ல புரட்சிவீரனையும், நல்ல புரட்சி வீரனுக்குத் தேவையான நல்ல பல பண்புகளையும், கொள்கைகளையும் 'நாடோடி மன்னன்' மூலம் புரட்சி நடிகர் அவர்கள் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார்கள்.

'நாடோடி மன்னன்' எல்லா வகையிலும் சிறந்ததொரு படமாகும் என்பதை எல்லா வகையினரும், எல்லா நிலையினரும், எல்லாத் தரத்தினரும், எல்லாத் திறத்தினரும், எல்லாக் கட்சியினரும் ஒப்புக் கொண்டிருப்பது புரட்சி நடிகர் அவர்களின் ஈடும் எடுப்பும் அற்ற புகழையும், பெருமையையும் காட்டுவதாகும்.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களின் கட்சிக் கொள்கைப்பற்று, புரட்சி உள்ளம், விடுதல்ல வேட்கை, பரந்த நோக்கம், உயர்ந்த பண்பு, விடா முயற்சி, எடுத்த செயலை முடிக்கும் திறம், எதிர்ப்புக்கும் ஏளனத்திற்கும் அஞ்சாமை, ஈகை உள்ளம் ஆகியவற்றை உலகம் அறிந்து கொள்ள 'நாடோடி மன்னன்' வழி வகை செய்வதாக அமைந்துள்ளது.

புரட்சி நடிகர் அவர்கள் சிறந்த நடிகர் - சிறந்த இயக்குநர் (டைரக்டர்) - சிறந்த படத் தயாரிப்பாளர் என்ற பெயர்களை 'நாடோடி மன்னன்' மூலம் பெற்றுவிட்டார்.

கண்டோரும் கேட்டோரும் வியக்கும் வண்ணம் தமிழகத் திரைப்பட உலகில் ஈடு இணையற்ற ஓங்கு புகழை எளிதில் எய்திவிட்ட படம் 'நாடோடி மன்னன்' என்றால் அது மிகையாகாது.

"வாழ்க அதன் புகழ்! வளர்க எம்.ஜி.ஆரின் முயற்சிகள்! வெல்க அவர் தொண்டுகள்!"

ஓர் அதிசய மனிதர் – கவிஞர் கண்ணதாசன் கூறுகிறார்

"அவருக்கு முன் சொந்தப்படத் தயாரிப்பில் பல நடிகர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அப்படி ஈடுபட்டதாலேயே பெரும்பாலோர் தொழிலிருந்து மறைந்தார்கள். இந்த அனுபவ உண்மை எம்.ஜி. ஆருக்கும் தெரியும். **அவரது புகழிலும், மக்கள் அவருக்கு அளிக்கும் மதிப்பிலும் பொறாமை கொண்ட பேய்க் காக்கைகள் வேறு, ஓயாமல் ஓலமிட்டுக் கொண்டிருந்தன.** "நமக்கு ஐம்பது, நூறு கொடுக்க மாட்டாரா" என்ற எதிர்பார்த்தும் ஏமாந்த சோணகிரிகள், படம் வெளிவந்ததும், எம்.ஜி.ஆர். நாடோடியாகிவிடுவார் என்று கூறினர் காரணம்.

"கூர்ந்து நாய் கவ்விக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கவ்வினார் ஈங்கில்லை"

என்ற வரிகளுக்கேற்ப, கடிக்க வந்த நாய்களை அடிக்கக்கூட விரும்பாமல், தலை நிமிர்ந்து நடந்த எம்.ஜி.ஆர். இன்று நாடாளும் மன்னனாக விளங்குகிறார்.

ஒன்று கலைவாணர்; மற்றொன்று புரட்சி நடிகர்

கலைவாணருக்குப் பிறகு நடிகர் உலகில் இவர் அதிசய மனிதர். மக்களை அணைத்துக் கொள்ளப் பழகிவிட்ட எவரும் தனியாகச் சாவதில்லை! கோடானுகோடி மக்கள் அவரை என்றும் பின் தொடர்வார்கள். இதே புகழும் பெருமையும் அவர் வாழ்நாள் முழுதும் தொடரும்.

பெருமூச்சு விட்டுப் பயனில்லை! இது அவர் விழித்திருந்து உழைத்துச் சம்பாதித்த புகழ்! நாளைய உலகம், நாளைய

திராவிட சமுதாயம், கடந்த காலத்திற்கோர் கலைஞன் பெயரையும், வருங்காலத்திற்கோர் கலைஞன் பெயரையுமே உச்சரிக்கும். ஒன்று கலைவாணர்; மற்றொன்று புரட்சி நடிகர்.

நல்ல கலைஞருக்கு மக்களெலாம் சொந்தம்!

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் கூறுகிறார் இதோ . . .

எண்ணரிய சாட்சிகளுக் கிடையில் நானும்
இதயத்தைத் திறந்தொன்று சொல்லுகின்றேன்:

திருந்து திருந்தெனத்தானும் நடந்து காட்டும்
சிறப்பாலே எம்ஜியார் சிறப்புப் பெற்றார்

பொருந்தாத கூற்றுக்களைப் பொய்யென் றோதும்
புதுமையினால் எம்ஜியார் புதுமையானார்

அவர்வாழ்க! கலைவளர்க! வென்று வாழ்த்தி
ஆரம்பக் கருத்தினை இங்கும் சொல்வேன்;

கலையென்றால் மக்களுக்குச் சொந்தம் – நல்ல
கலைஞருக்கு மக்களெலாம் சொந்தம்.

வாழ்த்துரைப்போம்

நமா. முத்துக்கூத்தன் கூறுகிறார் இதோ . . .

செல்லரித்த புராணத்தைப் படமெடுக்கும்
சிந்தனையில் நோய்கொண்டோர் தெளிவுகொள்ள

கல்லுடைத்துச் சிலைவடித்த விதமாயின்று
கருத்தாழம் கொண்டதொரு படமாய் மக்கள்

உள்ளத்தே வைத்திருக்கும் கலைஞராலே
உருவான நாடோடி மன்னனுக்கு

நல்வாழ்த்துக் கூறிமேலும் நலமே செய்யும்
நடிகரினம் வாழ்கவென்று வாழ்த்துரைப்போம்

புகழுக்குரியவரைப் புகழ்கிறோம்!

இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் கூறுகிறார் இதோ . . .

சரித்திரத்தில் இல்லாத அளவுக்குத் தென்னகத்தில் வெற்றி முழக்கமிட்டு நாடெங்கும் வீரபவனி வரும், நாடோடி மன்னன் வெற்றி விழா என்றதுமே உள்ளம் பூரித்தேன் - கலையிலே, கருத்திலே, புதுமையிலே, புரட்சியிலே, இலட்சியத்திலே அண்ணன் திரு. எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி, தம்பி புகழ்ந்துரைத்தால், அவர்களே புகழ்ந்து கொள்கிறார்கள் என்று தெளிவில்லாதார் கூறக்கூடும். புகழுக்குரியவரைப் புகழ்கிறோம். பெருமைப்படுகிறோம். ஒரு நடிகர் எடுத்த எடுப்பிலேயே டைரக்டர், சிறந்த தயாரிப்பாளர் என்ற அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறார் என்றால் கலை உலகிற்கே, மாபெரும் வெற்றியாகும் - மேலும், அண்ணனின் புகழ் மேலை நாடுகளிலெல்லாம் பரவ வேண்டும். தென்னகத்தின் பெருமையை, திருவிடத்தின் சிறப்பை, எடுத்துக்கூறும் ஆற்றல் பெற்று, மங்காத ஒளி விளக்காய்ப் பல்லாண்டு வாழ நாடோடி மன்னர், வெற்றி வீரரான அண்ணனை வாழ்த்துகிறேன். மேலும் அவரின் அரிய சாதனைகளை அகில உலகம் புகழும் நாள் - நம் உள்ளம் நிறைந்த நாள் என்று அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்திரிகைகள் பாராட்டுகின்றன

'நாடோடி மன்னன்' படம் பார்த்த பத்திரிகையாளர் பெரும்பான்மையோரும், கலைமுனையில் நடுநிலையிருந்து சீர்தூக்கிப் பாராட்டி விமர்சனங்களை வழங்கினர்.

பெரும்பாலான பத்திரிகைகளின் போற்றத்தக்க அந்த விமர்சனங்களின் சுருக்கமான தொகுப்பு இதோ . . .

சுதேசமித்திரன் . . .

'நாடோடி மன்னன்' பிரம்மாண்டமான முயற்சி. காட்சி ஜோர்டனைகளில் பணத்தைத் தண்ணீராக நினைத்துச் செலவிட்டிருக்கிறார்கள். பணத்தை அநேகம்பேர் செலவழிக்கிறார்கள். ஆனால் செலவுக்குத் தக்க பலன் கிட்டுவதில்லை. 'நாடோடி மன்ன'னில் செலவுக்குத் தகுந்த என்ன, சற்று அதிகப்படியான பலனே கிட்டியிருக்கிறது. கண்ணைக் கவரும் காட்சிகளைப் பார்க்கிறோம். கடைசியில் கன்னித்தீவு மலைச்சுனை வெள்ளத்தில் மூழ்கும்போது மேல்நாட்டுப் படங்களைப் பார்க்கும் பிரமை ஏற்படுகிறது.

இத்தகைய ஒரு பெரு முயற்சியில் ஸ்டுடியோ சொந்தக்காரர்தான் இறங்க முடியும் என்ற நம்பிக்கை தமிழ்ப் படவுலகில் இருந்து வருகிறது. தனி முதலாளியும் பெருமுயற்சியில் ஈடுபடலாம். வெற்றியும் அடையலாம் என்று **எம்.ஜி.ஆர். 'நாடோடி மன்னன்'** மூலம் நிரூபித்திருக்கிறார். அந்தத் துணிவுக்காக அவரைப் பாராட்டுகிறோம். எந்த இடத்திலும் படம் சுவை குன்றவில்லை.

சம்பவங்கள் நிரம்ப இருந்தாலும் கதையில் தெளிவு இருக்கிறது. வசனம் நன்றாக அமைந்திருக்கிறது.

டைரக்ஷனும், எடிட்டிங்கும் பிரமாதமாகச் செய்யப் பட்டிருக்கின்றன. கதையைச் சிறிதும் குழப்பமில்லாமல் திரையில் ஓட்டியிருக்கிறார் எம்.ஜி.ஆர். ஒரு சிறந்த நடிகர் சிறந்த டைரக்டராகவும் இருக்க முடியும் என்பதை இப்படத்தில் பார்க்கிறோம்.

தினமணி . . .

அற்புதமான படப்பிடிப்பும் நல்ல நடிப்பும் பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளும், இனிய பாடல்களும் வண்ணக் காட்சிகளும் நிறைந்த சித்திரம் **எம்.ஜி.ஆர்.** பிக்சர்ஸின் **'நாடோடி மன்னன்'**. தனது முதல் டைரக்ஷனின் **வெற்றி குறித்து எம்.ஜி.ஆர்.** பெருமைப்படலாம்.

கதையில் மக்களாட்சியின் சிறப்பை முடி மன்னனே உணர்ந்து கொள்வது போன்ற படிப்பினை காணப்படுவது நல்ல திருப்பம். கற்புக்குப் பங்கம் ஏற்படாமல் கதை அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பது கதையின் உயர்ந்த பண்பைக் காட்டுகிறது.

இரட்டை வேஷப் படப்பிடிப்பு அற்புதம். எம்.ஜி.ஆரின் இரட்டை வேடங்கள் கை குலுக்குவதும், கன்னத்தைத் தடவுவதும் ஒளிப்பதிவுத் திறமைக்கோர் எடுத்துக்காட்டு. தமிழ்நாட்டுத் திரைப்பட உலகில் இவ்வளவு பயங்கரமான வாட் போர்க்காட்சிகளைக் கண்டதில்லை என்று பெருமையுடன் சொல்லலாம்.

தமிழ்நாடு . . .

'நாடோடி மன்னன்' படத்தைப் பார்க்கும் பொழுது, வீரதீரச் செயல்கள், கத்திச் சண்டைகள் முதலியவை நிறைந்த ஆங்கிலப் படத்தைப் பார்ப்பது போன்ற உணர்ச்சி எழுகிறது. படத்தின் பிற்பகுதியில் வரும் தண்ணீர்ப் பெருக்கைப் போல, பணத்தைப் பணமென்று பாராமல் அள்ளி வீசியிருக்கிறார் படத்தயாரிப்பாளர். இதுவரை நாம் தமிழ்த்திரை உலகில் கண்டிராத திடுக்கிடும் பயங்கரச் சண்டைகள், கண்களைக் கவ்வும் காட்சியமைப்புகள் ஆகியவை இப்படத்தில் உள்ளன.

கதை முழுதும் தொடக்கத்திலிருந்து விறு விறுப்பாகச் செல்லுகிறது . . .

தண்ணீருக்குள் கனவுக் காட்சியில் சரோஜாதேவி, எம்.ஜி.ஆர். தோன்றும் கட்டம் பல தடவை பார்த்து ரசிக்கத்தக்கது. இதைப்போல உச்சநிலைக் கட்டத்தில் தொங்கு பாலத்தின் மீது சரோஜாதேவியும், எம்.ஜி.ஆரும் சிக்கிக் கொள்ளும் காட்சியும் வியக்கத்தக்கது. ஒளிப்பதிவாளர் ஜி.கே. ராமு பாராட்டத் தகுதியுடையவர்.

காட்சியமைப்புக்களைக் காணும்போது இது தமிழ்ப்படம்தானா என்ற ஐயம் எழுகிறது. மலைகளும், பள்ளத்தாக்குகளும், நீர்வீழ்ச்சிகளும், குகைகளும், தொங்கு பாலமும் ஆங்கிலப் படங்களை நினைவுபடுத்துகின்றன.

நவஇந்தியா . . .

நீதிதேவன்: எம்.ஜி.ஆருக்கு வைரம் பதித்த வாளை பரிசாகத் தருகிறேன்.

தினமலர்

இப்படம் தமிழ்ப்பட உலகில் ஓர் மகத்தான சாதனை; இமாலய வெற்றி - ஆங்கிலப் படங்களை மிஞ்சும் வகையில் கண்ணைக் கவரும் காட்சிகள் தத்ரூபமாகப் படமெடுக்கப்பட்டுள்ளன. ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு மற்றும் கலை நுணுக்கங்கள் மிகவும் உயர்தரமாக அமைந்துள்ளன. கன்னித்தீவுக் காட்சிகள் கேவா கலரில் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன. இவற்றுடன் 'சுவாரஸ்யமான'

விறுவிறுப்பான கதை, எம்.ஜி.ஆரின் இரட்டை வேடம், சிறந்த நடிப்பு, சந்திரபாபுவின் நகைச்சுவை விருந்து, இனிமையும், கருத்துச் செறிவும் நிறைந்த பாட்டுகள், கண்ணதாசனின் உயரிய வசனங்கள், 'கடலுக்கடியில் கனவு'க் காட்சி, பயங்கர கத்திச் சண்டைகள், எம்.ஜி.ஆரின் சிறந்த டைரக்ஷன் இவை சேர்ந்து இப்படத்தைத் தமிழ்ப்பட உலகில் ஒரு அதிசயமான படைப்பாக உருவாக்கியுள்ளன.

கல்கி . . .

இந்தப் படம் எம்.ஜி.ஆரால் தயாரிக்கப்பட்டு, எம்.ஜி.ஆர். டைரக்ஷனில் உருவான வெற்றிப் படம்.

மார்த்தாண்டன், வீராங்கன் என்னும் இரு வேறு இயல்புகள் கொண்ட இரண்டு பாத்திரங்களையும் எம்.ஜி. இராமச்சந்திரன் ஏற்று மிகத் திறமையாக நடிக்கிறார்.

படத்தில் வரும் நடனக் காட்சிகள் மிகக் கவர்ச்சியாக இருக்கின்றன.

ஒரு நடிகர் படாதிபதியாக மாறிப் படம் தயாரிப்பதென்றால், அதில் எத்தனையோ சிரமங்கள் இருக்கின்றன. போதாக்குறைக்குப் படத்தில் இரண்டு வேடம் தாங்கும் சிரமத்தையும் எம்.ஜி. இராமச்சந்திரன் ஏற்றிருக்கிறார். இதுவும் போதாக்குறைக்குப் படத்தின் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்று மிகவும் வெற்றிகரமாகச் செய்திருக்கிறார். அதற்காக அவரை எவ்வளவு வேண்டுமானாலும் புகழ்ந்து போற்றிப் பாராட்டலாம்.

ஆனந்த விகடன்

மாணிக்கம்: நாடோடி மன்னன் ராஜாங்கத்திலே நல்ல சட்டமெல்லாம் செய்யறாங்க அண்ணே.

முனுசாமி: ஆமாம். ரொம்பப் பெரிய படமாமே?

மாணிக்கம்: என்ன த்ரில்லு! என்ன ஸ்டண்டு! ஒரு சீன்லே எம்.ஜி.ஆர். ஒரு பாலத்தை ஒரு கையாலே இழுத்துப்பிடிச்சு விழாம நிறுத்தறாரு! இன்னொரு சீன்லே, கோட்டைக்குள்ளாற தண்ணி வந்துடுது. அங்கே ஒரு எம்.ஜி.ஆரை இன்னொரு எம்.ஜி.ஆரு தூக்கிக்கிட்டு நூல் ஏணி வழியா ஏறி வெளியே வாராரு! அப்புறம் அண்ணே,

சொன்னாக்கூட நீங்க நம்ப மாட்டீங்க: எம்.ஜி.ஆரும், எம்.ஜி.ஆரும் கை குலுக்கறாங்க; அந்த இடத்திலே போட்டோகிராபி என்னையே குலுக்கிடுச்சு.

முனுசாமி: ஏன் தம்பி, ஸ்டண்டுப் படமோ?

மாணிக்கம்: ஸ்டண்டு, ரொமான்சு, அரசியல், சமூகம், பொருளாதாரம், அழகு, பாட்டு அத்தனையும் உண்டு.

முனுசாமி: கட்சிப் பிரசாரம் காதைத் தொளைக்குதா?

மாணிக்கம்: இல்லே அண்ணே, சத்தமே போடல்லே, திட்டல்லே. சொல்றதெல்லாம் சுவையா இருக்கு.

முனுசாமி: ராஜா ராணி கதையிலே கட்சிக் கருத்தெல்லாம் அவ்வளவா பொருந்தாதே?

மாணிக்கம்: பொருந்தறாப்பிலே சொல்லியிருக்காங்க.

முனுசாமி: நான் உடனே பார்க்கணும்னு சொல்லு?

மாணிக்கம்: ஆமாம், கண்ணுக்கு விருந்து. காதுக்கு விருந்து. கருத்துக்கு மருந்து. ஆனால் காசுக்குத்தான் நஷ்டம்.

முனுசாமி: என்ன தம்பி?

மாணிக்கம்: ஆமா, ஒருவாட்டி பாத்துட்டா இரண்டாம் தடவை பார்க்கச் சொல்லும்.

ஜனசக்தி . . .

நாடோடி மன்னன் எதிர்பார்த்தவர்களை ஏமாற்றவில்லை.

மன்றம் . . .

எம்.ஜி.ஆரின் சலியாத உழைப்பினாலும் தளராத முயற்சியிலும் உருவாகி வந்ததுதான் 'நாடோடி மன்னன்'. எடுத்த காரியம் எதிலும் நம் நண்பர் குறை வைப்பதில்லை. அதே போல் இந்தப் படத்திலும் பார்த்தவர்கள் எவரும் பாராட்டும் வகையில் தமது பணியைச் செய்துள்ளார்!

எம்.ஜி.ஆர். அவர்கள் முதல் தடவையாக டைரக்ட் செய்த இந்தப் படத்தின் முதல் தரமான வெற்றியை அடைந்துள்ளார் என்றே கூற வேண்டும். டைரக்டர் எம்.ஜி.ஆருக்கும், நடிகர் எம்.ஜி.ஆருக்கும் போட்டி இருந்திருக்கிறது. புதிதாக

'டைரக்டர்' என்ற திறமை சிறப்படைந்ததென்றால், முன்பிருந்த 'நடிகர்' என்ற திறமை அதைவிட ஒருபடி முன்னேறியே இருக்கிறது! நாடோடியாக வரும் காட்சிகளில் கனிவும் எளிமையும் சேர அவர் நடித்திருக்கிறார்.

திராவிடன் . . .

திரைப்படத் துறையில் இந்தியத் துணைக் கண்டத்தை மட்டுமல்லாது மேலைய நாட்டுப் படங்களுடன் போட்டியிட்டு வெற்றி வாகை சூடும் அளவுக்கு நாடோடி மன்னன் நாடெங்கும் ஈடு இணையின்றி பவனி வருகிறான்!

'நாடோடி மன்னன்' அடுத்த சர்வதேச கலைத்துறை அரங்கின் பரிசைப் பெற்று வாகை சூடுவான் என்றே நம்புகிறோம்.

இந்த அரிய படைப்புக்காக எம்.ஜி.ஆர். பிக்சர்சாரை மனமாரப் பாராட்டுகிறோம். அவர்களின் கலைத்தொண்டு வளர்க! வெல்க!

தமிழ் நடிகன் . . .

'நாடோடி மன்னன்' திரைப்படம் கலைஞர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் உள்ளத்து ஒளியின் பிரதிபலிப்பு; அவரது அனுபவ ஆற்றலின் முத்திரை; எல்லை கடந்த அன்புப் பெருக்கின் புனிதமான வடிகால்.

'நாடோடி மன்னன்' செய்துள்ள புரட்சிகள் பல! முடியாட்சியை உடைத்துக் குடியாட்சியை ஏற்படுத்திய புரட்சி; 'தனக்கொரு கொள்கையுண்டு' என்பதைத் தான் எடுத்த படத்திலே முன்னேற்றக்கொடி காட்டி வெளிப்படுத்திய புரட்சி; கலையுலகிற்கே ஒரு புதிய சாதனையாகப் பல துறைகளிலும் வெற்றி கண்ட புரட்சி . . . இன்னும் பலப்பல.

பேசும் படம்

குழப்பமில்லாத தெளிவான கதைப்போக்கும், கட்டுக்கோப்பான சம்பவங்களும், கருத்துடன் அமைந்த வசனமும் பாடல்களும் இப்படத்தில் இருக்கின்றன. எம்.ஜி.ஆர். இரு வேடங்களில் ஏக காலத்தில் தோன்றும் கட்டங்களும் வண்ணக் காட்சிகளும் நல்ல கோணங்களில் மிக அழகாக

ஒளிப்பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டு வேடங்களைத் தாங்கித் திறமையாக நடித்து, படத்தைச் சிறப்பாக டைரக்ட் செய்திருக்கிறார் எம்.ஜி.ஆர்.

சினிமா கதிர் . . .

நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன் டைரக்ஷனில் வளர்ந்த படம் இது என்பதைப் பார்க்கும்போது எவரும் மகிழ்ச்சியே அடைவர். பலநாள் அனுபவமுடையவர்கள்கூட நாடோடி மன்னனை இவ்வளவு நல்முறையில் எடுத்திருக்க முடியாது. நடிகராக வேஷம் போட்டுத் திறமையாக அவர் நடித்ததைவிட டைரக்டராகப் பொறுப்பேற்றுச் செய்த பணி சாலச் சிறந்தது. மிகப் பெரியது. போற்றற்குரியது.

மொத்தத்தில் நீண்ட நாள் கழித்து வந்த நாடோடி மன்னன் ரசிகர்கள் மனதில் நெடுநேரம் இடம்பிடித்துக் கொள்ளும் சக்தி பெற்றிருக்கிறது எனலாம்.

கன்னியாகுமரி . . .

நாடோடி மன்னனுக்கு வெற்றி! இதற்குக் காரணமென்ன? இலட்சக்கணக்கான பொருட் செலவில் படத்தினைத் தயாரித்ததாலா? அல்ல, மூலதனத்தோடு மூளையும் நல்லதுபோல் ஒத்துழைக்க வேண்டும். இந்த உழைப்பு புரட்சி நடிகரைப் பொறுத்தவரை இருந்ததால்தான் வெற்றி பெற்றுள்ளது.

கலை அரசி . . .

இப்படத்தை யார் யார் எந்தெந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் எதுவும் குறை சொல்ல இயலாது. அப்படிக் குறை காண்பவர்கள் குறை மதிப்புடையவர்களாகத்தான் இருக்க வேண்டும். தமிழ்ப்பட உலகில் இது ஓர் மகத்தான சாதனை. இதுவரை எவரும் செய்யாத சாதனை. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற திரை ஓவியம் நாடோடி மன்னன். சிலர் கூறுவது போல் பொழுதுபோக்குப் படமல்ல. போற்றிக் காக்க வேண்டிய கருத்துக் களஞ்சியங்கள் அடங்கியது நாடோடி மன்னன். ஒருமுறை அல்ல, பலமுறை காண வேண்டியது.

நடிகன் குரல் . . .

நமது எம்.ஜி.ஆர். அவர்கள் எடுத்த எடுப்பிலேயே 'டைரக்டர்' என்ற பதவியின் முழுத் தகுதியையும் பெற்று, முறையாகப் பொறுமையோடு, முயற்சியோடு தமது முதற்படத்திலேயே வெற்றியின் சிகரத்தைக் கண்டு வீரவாகை சூடியுள்ளார்.

அவரை, நடிகர் என்று போற்றினோம். நற்பணியாளர் என்பதை நாடே அறியும். நல்ல படாதிபதி என்பதை அவருடன் உழைக்கும் பண்பாளர்களின் நல்வாழ்வு. நமக்குப் பறைசாற்றும். ஆனால் நம்மிலே ஒரு டைரக்டர் நாடறிந்த ஒரு டைரக்டர்! நாளை பல நல்ல படங்களை எடுக்கப்போகும் டைரக்டர்! இதோ ஒரு டைரக்டர் என்று நாளை உலகம் சுட்டிக் காட்ட வேண்டிய டைரக்டர் வந்துவிட்டார். அவரது படங்கள் உலக முதற்பரிசைப் பெற்று நம் நாட்டுக்குப் பெருமை தேடித் தரட்டும். வாழ்க டைரக்டர் எம்.ஜி.ஆர்.

கண்ணகி . . .

அதிக முக்கியத்துவமளித்து ஆவலோடு எதிர்பார்த்த படங்கள், அநேகமாய்த் தோல்வியில் முடிவது, தமிழ்நாட்டுப் படச்சரிதைக்கு மாமூல். அந்த மாமூலை நாடோடி மன்னன் உடைத்துவிடுகிறது - ரசிகர்களை ஏமாற்றவில்லை.

தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பைப் பொறுத்தவரை, எவரும் பூரிப்படையும் விதத்தில் முன்னேறி உச்சம் பெற்றுவிட்டது. இதற்கு முதன்மை வகிப்பவர் எம்.ஜி.ஆர். தான் என்பதை எவருமே தயக்கமின்றி - ஒப்புக் கொள்வார்கள்.

தமிழ் நேசன் (கோலாலம்பூர்) . . .

காட்சி ஜோடனைகளும், படப்பிடிப்பும் பிரமாதம். நீண்ட நாட்களாக நல்ல தமிழ்ப் படத்தை எதிர்பார்த்து வந்த மலாயா ரசிகர்களுக்கு எம்.ஜி.ஆரின் நாடோடி மன்னன் கண்ணுக்கும் கருத்துக்கும் நல்விருந்தாகும்.

தமிழ் முரசு (சிங்கப்பூர்) . . .

காமிரா பல கோணங்களில் கையாளப்பட்டிருக்கிறது. உதாரணமாக எம்.ஜி.ஆர். மன்னனாகவும், நாடோடியாகவும்

தோன்றி கைலாகு கொடுக்கும் காட்சி படமாக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிடலாம்.

கதை பழைய ராஜா ராணி கதைதான். எனினும் சீர்திருத்தக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

கத்திச் சண்டைகள், நடனங்கள், பாட்டுகள் முதலியன ஜனரஞ்சகமான அம்சங்கள். பார்த்து மகிழ வேண்டிய படம். ஆதலால் பார்த்தவரெல்லாம் பாராட்டுகின்றனர்.

கலை மலர் (சிங்கப்பூர்) . . .

வசனம் அர்த்தச்சுவை மிகுந்து காணப்படுகிறது. பாடல்களை இயற்றியவர்களும் பின்னணி பாடியவர்களும் கட்டத்திற்கேற்றவாறு மிக நன்றாகத் தம் கடமையைச் செய்திருக்கின்றனர். படப்பிடிப்பு, டைரக்ஷன், வர்ணக் காட்சிகள் இவை குறைகூற இடமின்றி அமைந்துள்ளன. நடிப்பைப் பற்றிக்கூறும்போது எம்.ஜி.ஆர். நாடோடி வேடத்தில் வெகு சிறப்பாக நடித்திருக்கிறார்.

இந்தியன் மூவி நியூஸ் (சிங்கப்பூர்) . . .

'நாடோடி மன்னன்' தமிழ்த் திரைப்படத் தயாரிப்பிலேயே ஒரு தீரமிக்க சாதனையாகும்.

ஒவ்வொரு அம்சமும் கவனித்துப் படமாக்கப்பட்டிருக்கிறது. பாதிப் படத்திற்கு மேல் கலரில் காட்சிகளைக் காணும்போது அலுப்போ, சலிப்போ சற்றும் தோன்றாமல் செய்துவிடுகிறது. காட்சி அமைப்பும், கதையும் மட்டுமல்ல, பொருத்தமான இடங்களில் ஆடலும், பாடலும் அமைக்கப்பட்டிருப்பதால் ரசிப்பதற்கு நிறைய உண்டு இப்படத்தில். வெள்ளப் பெருக்கு, கன்னித்தீவுவாசிகளின் நடனம், கனவுக் காட்சி முதலியவை பிரமிக்க வைக்கின்றன.

The Hindu . . .

A tale of romance and adventure told with a gusto that compels attention for much, if not the entirety, of the long narrative, A delightful performance from M.G. Ramachandran in the dual role of a prince of pleasant manners and a rebel. (a man of the people whose head is full of ideas for their uplift.)

Effective use of the camera particularly in certain outdoor scenes and in the attractive massed dance sequence which is full of fast movement; a fair sprinkling of luxuriant sets. Music which is pleasant on the ear and talk which is generally easy - flowing.

Colour enhances the pictorial value of several sequences. Mr. M.G. Ramachandran, directing the film, has done a worthwhile job.

The Indian Express...

M.G.R. as a director has scored and of course made good use of the talents of the new find, Saroja Devi.

The palace plot and the stirring events that figure in this film, that opens with an invocation to Tamil and calls for a return to antique virtue.

There is comedy from Chandrababu and heroics from M.G. Ramachandran, as usual and arresting figure on the screen.

The features of a box office hit are all found in the new Tamil film that marks the advent of M.G.R. as a producer on his own.

The Mail...

The swash-buckling hero of the Tamil screen. M.G. Ramachandran, turns a director in 'Emgeeyar Pictures' 'Nadodi Mannan'.

He also does the dual role of a prince and his subject, in a story full of adventure and romance.

..... In more than one sense, therefore is the film entirely M.G.R.'s; it is his own production too.

G.K. Ramu's camera work deserve, special mention, especially for the eye-filling location shots taken in Munnar and other parts of Kerala.

Sport & Pastime...

M.G.R.'s triumph consists in the breath-taking speed which he achieves and which leaves no time for the audience to think or to doubt. It must be said to his credit that there is not a dull moment in all the nearly four hours of the film.

Its photography is a remarkable piece of work and cameraman Ramu's skill is seen in the dream scene which undoubtedly is a highlight of the picture.

The sword fight between M.G.R. and Nambiar on the seashore and in water is another feature of which the director can legitimately be proud. The flood scene towards the end has been conceived and executed on a grand scale and it is yet another feather in M.G.R.'s cap.

Sunday Times...

The screening of "Nadodi Mannan" is a great achievement to Producer Director M.G. Ramachandran. The film trilogy is monolithic, its actions developlogically and organically. The cast is very well selected and the landscapes to which the film goers are carried by cameraman Ramu are magnificent. Very well done, M.G.R.! Congrats!

01.12.1958 – திண்டுக்கல்

30.11.1958-இல் சென்னையில் நாடோடி மன்னன் வெற்றி விழா நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு கலைஞர்கள் திரு. எம்.ஜி.ஆர்., திரு. பி. எஸ். வீரப்பா, திரு.எம்.என். நம்பியார், திருமதி. எம்.என். ராஜம், பி. சரோஜாதேவி, ஜி. சகுந்தலா, ஒளிப்பதிவாளர் ஜி.கே. ராமு, இசை அமைப்பாளர் எஸ்.எம். சுப்பையா நாயுடு ஆகியோரும், எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிர்வாகிகளும் இரவே புறப்பட்டு டிசம்பர் முதல் நாள் திண்டுக்கல்லை அடைந்தார்கள்.

திண்டுக்கல் சென்டிரல் சினிமாவில் 102-வது நாள் விழா திண்டுக்கல் சப் கலெக்டர் திரு.கே. திரவியம் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மூன்று காட்சிகளிலும் திரைப்படக் கலைஞர்கள் மேடையில் தோன்றி மக்களைச் சந்தித்து விழாவைச் சிறப்பித்தார்கள்.

மதுரை – 02.12.1958

டிசம்பர் 2-ம் நாள் மதுரை மாநகரம் கண்டிராத அளவில், தங்கம் தியேட்டரில் 103-வது நாள் விழா பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மூன்று காட்சிகளிலும், ஏறத்தாழ 15,000 மக்கள்,

கலைஞர்களை மேடையில் சந்தித்து மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர். அதைத் தொடர்ந்து மதுரை உடுப்பி உணவு விடுதியில் தோழமைக் கழகத்தினரின் காலை விருந்தும், மதுரை எம்.ஜி.ஆர். மன்றங்களின் சார்பில் தமுக்கம் திடலில் பாராட்டு விழாவும் அளிக்கப்பட்டு, மதுரை மக்களால் திரைப்படக் கலைஞர்கள் மகிழ்விக்கப்பட்டனர்.

நெல்லை – 03.12.1958

டிசம்பர் 3-ம் நாள் நெல்லை பாப்புலர் டாக்கீஸில், நகர மன்றத் தலைவர் திரு. ப. ரா. அவர்கள் தலைமையில் 104-ம் நாள் விழா நடைபெற்றது. நெல்லை நகர மக்களின் பேராதரவையும், பெருமகிழ்ச்சிப் பெருக்கையும் மூன்று காட்சிகளிலும் நேரில் தோன்றி 'நாடோடி மன்னன்' திரைப்படக் கலைஞர்கள் கண்டு களித்துப் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்.

திருச்சி – 04.12.1958

டிசம்பர் 4-ம் நாள் திருச்சியில், செட்டியார் பிலிம்ஸ் பட விநியோக நிறுவனத்தின் உரிமையாளர்கள், திரு. எம்.ஜி.சக்கரபாணி அவர்கட்கும், திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கட்கும் பொன்னாடை அணிவித்து, பாராட்டுரை வழங்கிச் சிறப்பித்தார்கள். விழாவிற்குத் தஞ்சை நகர்மன்றத் தலைவர் திரு. A.Y.S. பரிசுத்த நாடார், எம்.எல்.ஏ., அவர்கள் தலைமை வகித்தார்கள். செந்தமிழ்ச் செல்வர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் பொன்னாடை அணிவித்து வாழ்த்துரை வழங்கினார்கள். அன்று ராக்ஸி தியேட்டரில் 105-வது நாள் விழா திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் சிறப்புறக் கொண்டாடப்பெற்று, திரைப்படக் கலைஞர்கள் பாராட்டப் பெற்றார்கள்.

கோவை – 05.12.1958

டிசம்பர் 5-ம் நாள் கோவை 'ராஜா தியேட்டரில்' 106-வது நாள் மக்களின் பேரார்வத்துக்கிடையே கொண்டாடப் பட்டது. கலைஞர்கள் அனைவரும் சந்திர பிரபா பட விநியோக நிறுவனத்தினராலும், ராஜா தியேட்டர் உரிமையாளர்களாலும் பாரட்டப்பட்டனர்.

தஞ்சை – 06.12.1958

டிசம்பர் 6-ம் நாள் தஞ்சை யாகப்பா டாக்கீசில், 107-வது நாள் விழா குடந்தை மாநகராட்சி மன்றத் தலைவர் திரு. டாக்டர் மூர்த்தி அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. அன்று மாலை தஞ்சை 'திலகர் திடலில்' பல்லாயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் தஞ்சை நகர கழகத்தின் சார்பில் திரைப்படக் கலைஞர்கட்கு வரவேற்பு ஒன்று அளிக்கப்பட்டது.

நாடோடி மன்னன் திரைப்படத்தின் வெற்றி விழா மதுரையில் நாவலர் இரா. நெடுஞ்செழியன் பங்கேற்க மதுரை முத்து ஏற்பாடு செய்ய கொண்டாடப்பட்டு தங்கவாள் பரிசளிக்கப்பட்டது 26.10.1958-இல். சென்னையில் அறிஞர் அண்ணா பங்கேற்ற விழா 30.11.1958-இல் நடைபெற்றது.

வேலூர் – 10.12.1958

வேலூரில் 10.12.1958-இல் பராக்ஸ் மைதானத்தில் நடைபெற்ற விழாவில் திரைப்படக் கலைஞர்கள் அனைவரும் பாரட்டப்பட்டனர். இரவு திரைப்படக் கலைஞர்கட்கு, ஆனந்தா பிக்சர்ஸ் படவிநியோக நிறுவனத்தினரால் அளிக்கப்பட்ட விருந்தொன்றில், நகரப் பிரமுகர்களும், படத்தொழிலில் ஈடுபட்டோரும் பலரும் கலந்து கொண்டு கலைஞர்களைப் பாராட்டிச் சிறப்பித்தனர். **கடைசியாக நடைபெற்ற இந்த விழாவில்தான் மு. கருணாநிதி எம்.எல்.ஏ கலந்து கொண்டோர் என்பது வரலாற்று உண்மையாகும்.**

அரசியலில் தனி முத்திரை

1965-இல் 'எங்கள் வீட்டுப் பிள்ளை' படத்தின் வெள்ளி விழாவில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரையில் குறிப்பிடுகிறார்.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களின் வெற்றி இயற்கையானது; இமயம் போன்றது.

அப்படிப்பட்ட வெற்றியை எட்டிப் பிடிக்க முயன்ற பிறர் சறுக்கி விழுந்து விட்டனர். இந்த இயற்கைத் தன்மை வாய்ந்த

வெற்றியின் காரணத்தை அறிய முயல்வது வீணான செயலாகும்.

'மயிலின் தோகைக்கு அழகு வந்தது - எந்த வண்ணத்தால்? நீல நிறத்தாலா? பச்சை நிறத்தாலா? அல்லது மஞ்சள் கலந்த பொன் நிறத்தாலா? என்று யாராவது ஆராய்ந்தால், அது எவ்வளவு வீணான செயலோ, அப்படிப்பட்ட செயல், புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களின் வெற்றியை ஆராய்வது!

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள், எந்தத் துறையை மேற்கொண்டாலும் அதில் வெற்றி காண்பார்.

நடிகராக மட்டும் அல்லாமல், கதாசிரியர் ஆகவோ, பாடல் ஆசிரியராகவோ, இசை அமைப்பாளராகவோ பணியாற்றினாலும் அந்தத் துறைகளிலும் அவர் முழு வெற்றி காண்பார்.

ஏன், நாளை ஒரு நாள் அரசியலில் பொறுப்பேற்றுச் செயல்பட்டால் - அதிலும் அவருடைய தனி முத்திரை பதிக்கப்படும்.

அகத்திலும் புறத்திலும் சிறந்தவர்

அறிஞர்அண்ணா 1966-இல் இராயப்பேட்டை முத்தமிழ் மன்ற மலரில் எழுதுகிறார்.

மக்களுக்கு உதவுகிறார். உதவ வேண்டும் என்று துடிக்கிறார். உதவி செய்து கொண்டே இருக்கிறார்.

ஆக, அகத்திலும் (நடிப்பிலும்) புறத்திலும் (அரசியலிலும்) ஒருங்கே சிறப்பை எட்டிப் பிடிக்கிறார் எம்.ஜி.ஆர்.

முகமே வேண்டும்

சென்னை - விருகம்பாக்கம் தேர்தல் மாநாட்டில் 1967-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 2-ஆம் நாள் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரை. ('நம் நாடு' நாளிதழ்: சனவரி 3, 1967) அண்ணா முழங்குகிறார் . . .

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்னிடம் வந்து தேர்தல் நிதிக்குக் கணிசமான தொகை தருவதாகக் கூறினார்.

ஆனால் நான் எம்.ஜி.ஆரிடம் கூறினேன்.

“நீங்கள் தரும் கணிசமான தொகையைவிட, உங்கள் முகத்தை மக்கள் பார்த்தால் 30 ஆயிரம் ஓட்டுகள் ஒவ்வொரு தொகுதியிலும் எனக்குக் கிடைக்கும்.

உங்கள் பேச்சை மக்கள் கேட்டால், பத்து இலட்சம் பேர் மனம் திரும்புவர்.

ஆகவே நீங்கள் தேர்தலுக்காக சனவரியிலிருந்து பிப்ரவரி வரை எத்தனை நாட்கள் ஒதுக்க முடியும்?” என்று கேட்டேன்.

‘சனவரி 20-லிருந்து பிப்ரவரி 13 வரை முழுக்க முழுக்க இந்தத் தேர்தல் பிரச்சாரப் பணியில் ஈடுபடுகிறேன்’ என்றார் அவர்.

பல்லாவரம் தொகுதிக்கு மட்டும் அல்லாமல் மற்றத் தொகுதிகளுக்கும் வர வேண்டும் என்றேன்.

‘சரி’ என்றார் எம்.ஜி.ஆர்.

இப்போது நான் சொல்ல வேண்டியவர்களிடம் கூறி விட்டேன். அவரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு.

தருமம் தலைகாக்கும்

‘எம்.ஜி.ஆர். சுடப்பட்டார்’ என்ற செய்தி தொலைபேசி மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டபொழுது, முதலில் நான் நம்பவில்லை! துப்பாக்கி, பல அக்கிரமங்களைச் செய்திருக்கலாம். ஆனால், ‘அது எம்.ஜி.ஆர். அவர்களைக்கூடச் சுடுவதற்குத் துணியுமா?’ என்றே நினைத்தேன்!

சுடப்பட்ட அவரை நேரில் மருத்துவமனையில் பார்த்த பொழுது - என் கண்ணில் கொப்புளிடத்துக் கொண்டு வந்த கண்ணீரைத் தடுக்க முடியவில்லை! எம்.ஜி.ஆர். மீது பாய்ந்த குண்டு கொஞ்சம் திசை மாறி, ‘தருமம் தலைகாக்கும்’ என்பதை நிரூபித்து விட்டது!

கலையுலகில் உள்ள பலரையும் நான் நெருக்கமாக அறிவேன்; அந்த உலகத்திற்குச் செல்லும் யாருக்குமே ஒரு கணம் தலையைச் சுற்றும்.

அப்படிப்பட்ட அந்த உலகத்தில் அப்பழுக்கு அற்றவராக, இருப்பவர் எம்.ஜி.ஆர்.

தாய்மார்கள் சொல்வார்கள்:

"நம்ப எம்.ஜி.ஆர்.! . . . நம்ப எம்.ஜி.ஆர்.! என்று"

புரட்சி நடிகர் அவர்களை, உங்கள் வீட்டில் உள்ள ஒருவரைப் போல், சொந்தத்துடனும், பந்தத்துடனும் பேசுகிறீர்கள்.

அப்படிப்பட்ட நல்லவர் - நீங்கள் பெரியவராக இருந்தால், அவர் 'உங்கள் பிள்ளை' - சற்று வயதானவராக நீங்கள் இருந்தால், அவர் 'உங்கள் தம்பி' - இளையவராக நீங்கள் இருந்தால், அவர் 'உங்கள் அண்ணன்'!

எம்.ஜி.ஆர். அவர்களை விடவா ஒரு நல்ல பிள்ளை - நல்ல குணம் படைத்தவர் - உங்களுக்குக் கிடைக்கப் போகிறார்? என்று *பரங்கிமலை சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த பல்லாவரம் நகரில் 1967-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8-ஆம் நாள் தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரையில் தெரிவித்தார். (நம் நாடு, நாளிதழ்: பிப்ரவரி 9 - 10, 1967)*

தமிழர் தலைவர் வைகோ

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழியில் புரட்சிப் புயல் மக்கள் தலைவர் வைகோ அவர்கள் தமிழர் தம் நலனுக்காக நாளெல்லாம் உழைத்து வருகிறார். அவர் தம் வழியில் அணிவகுத்து நிற்போம். அவரது முயற்சிகளுக்கு உறுதுணையாக நிற்போம். நல்லோரே, நல்லோரே நல்லாதரவைத் தாருங்கள்! தாருங்கள்!

நாடோடி மன்னன்

செ.திவான்